# உதயன்

ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை (17-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:278


## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகின

### சின்மயபாரதி மாணவனுக்கு முதல் இடம்

யாழ்ப்பாணம், ஒக். 17

கொழும்பில் நேற்று வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றிய மாணவர்களில் 825 மாணவர்கள் யாழ். குடாநாட்டுக்கான தகுதிகாண் புள்ளி மட்டம்(வெட்டுப்புள்ளி) 118 ஐப் பெற்று பிரபல பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

பரீட்சை முடிவுகளின்படி குடாநாட்டில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் மற்றும் அவர்களது பாடசாலை, அவர்கள் பெற்ற புள்ளி விபரங்கள் வருமாறு:

★ எஸ். செந்தில்குமரன் (சுதுமலை சின்மயபாரதி வித்தியாசாலை) — 178 புள்ளிகள்.

★ செல்வி எல். சுந்தரலிங்கம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) — 171 புள்ளிகள்.

★ எஸ். மதுசிந்துஜா (வல்வெட்டித்துறை றோ. க. த. க. பாடசாலை) — 169 புள்ளிகள்.

★ எஸ். பாகினி (வதிரி புனித இருதயக்கல்லூரி) — 169 புள்ளிகள்.

★ ரி. முகுந்தன் (கரணவாய் தாமோதர வித்தியாசாலை) —169 புள்ளிகள்.

★ ரி. ஹரிகரன் (திருநெல்வேலி இ. த. க. பாடசாலை) — 169 புள்ளிகள்.

★ ரி. எச். ஏ. தாமோனுதன் (கல்வியங்காடு இ. த. க. பாடசாலை) — 167 புள்ளிகள்.

★ ரி. ஜெகன் மோகன் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) — 166 புள்ளிகள்.

★ என். வேணுகோபன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) — 166 புள்ளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற் கரும்புலிகளின் படகுகள் மோதி ஆறு பேர் உயிரிழப்பு

### கொக்கிளாய்ச் சமரின் போது

வவுனியா, ஒக். 17

முல்லைத்தீவு கொக்கிளாய் கடலில் நேற்று முன்தினம் அதிகாலை கடற் கரும்புலிகளின் படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஆறு கடற்கரும் புலிகள் உயிரிழந்தனர் என்று புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது

கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில்நடைபெற்ற சண்டையின் போதே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையின் போது கடற்படையினரின் நான்கு போராப் படகுகள் சேதமானது தெரிந்ததே

கடற்கரும்புலிகளின் படகுகள் மோதிக் கொண்ட சம்பவத்தில் உயிரிழந்தோர் விவரம் வருமாறு:-

★ கடற் கரும்புலிகளான லெப். கேணல் அருந்தவம் (கிருஸ்ணபிள்ளை உதயகுமார் — யாழ். மாவட்டம்)

★ லெப். கேணல் பழனியப்பு அல்லது குகனேஸ் (ரெங்கையா மோகேந்திரன் — வவுனியா)

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒலுமடுப் பகுதியில் நேற்றும் கடும் சமர்!

## 4 படையினர் பலி, பலர் காயம்

வவுனியா ஒக்ரோபர் 17

மாங்குளத்துக்குக் கிழக்கே ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நேற்றுப் பிற்பகல் மீண்டும் மோதல்கள் வெடித்தன என்று வவுனியாவிலிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த மோதல்கள் வெள்ளிக்கிழமை மாலை முடிவடைந்த நிலையில் நேற்று மீண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்றைய மோதல்களின் போது 4 படையினர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களில் 312 படையி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்து

வலிகிழக்கு ஒக். 17

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்றுக்காலை கோப்பாய் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது

வீதியை விட்டு விலகிய பஸ் அருகேயிருந்த கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் சுற்றுமதிலை உடைத்து உள்ளே நுழைந்த நிலையில் காணப்பட்டது

நேற்று விடுமுறை தினமானதால் மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5-180-173)

## கேரதீவில் மோதல்

தென்மராட்சி. ஒக். 17

கேரதீவு அறுகு வெளி இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பெரும் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது

பரா வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு இடைவிடாத ஷெல் தாக்குதல்களும் தொடர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மோதலில் ஓர் இராணுவச் சிப்பாய் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் —

நேற்றுக்காலை 8 மணி முதல் அல்லாரை இராணுவ முகாமில் இருந்து பூநகரிப் பகுதியை நோக்கித் தொடர் ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

(இ-6-31-117)

## நான்கு சடலங்கள் நேற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

கேரதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தனர் என்று தெரிவித்து நான்கு சடலங்கள் நேற்று மாலை 6 மணியளவில் சாவகச்சேரிப் பொலீஸாரால் யாழ். மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சடலங்களில் ஒன்று இளம் பெண்ணுடையது. மற்றவை ஆண்களுடையவை.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. சடலங்களின் பெரும் பகுதி சிதைந்த நிலையில் காணப்பட்டன.

தமது படைமுகாம் பகுதியில் 4 சடலங்கள் உள்ளதாகவும் அவற்றை எடுத்துச் செல்லுமாறும் கேரதீவுப்படை முகாம் அதிகாரிகள் அறிவித்தனர் என்றும் —

அதனை அடுத்தே தாம் சடலங்களை அங்கிருந்து எடுத்து வந்து மருத்துவமனையில் ஒப்படைத்ததாகவும் — சாவகச்சேரிப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-6-8)

## 32 சடலங்கள் கையளிப்பு!

வவுனியா ஒக். 17

ஒலுமடு அம்பகாமம், ஒட்டுசுட்டான் பகுதிகளில் படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் 32 சடலங்கள் நேற்று மாலை மாங்குளத்தில் வைத்து படையினரால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஒலுமடு, அம்பகாமம், ஒட்டுசுட்டான் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பெரும் மோதல்களின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்களே இவை எனக் கூறப்பட்டது.

சடலங்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அவற்றைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று அங்கு புலிகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தது என குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா நேற்றுக்கொழும்பில் தெரிவித்தார்.

(இ-6-164)

### எல்லைக்கிராம பாதுகாப்புக்காக

## புதிதாக அமைக்கப்பட்ட காப்பரண் மீது தாக்குதல்!

அம்பாறை, ஒக். 17

மட்டக்களப்பு— அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமமான பக்கியல்லவில் 11 ஆம் கட்டை என்ற இடத்தில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட பொலீஸ் காவலரண் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஓர் ஊர்காவலர் உயிரிழந்தார் எனவும்—

மூன்று பொலீஸார் உட்பட 8 பேர் காயமடைந்தனர் என்றும்—பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலின்போது சில ஆயுதங்களை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றனர் என்று மற்றொருசெய்தி தெரிவித்தது.

எல்லைக் கிராமமான புஞ்சி சிகிரிய மீது அண்மையில் இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலை அடுத்து எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்காக இந்தப்பொலீஸ் காப்பரண் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-6-14-21)

## தெற்கில் மண்சரிவுக்கு இருவர் பலி

கொழும்பு ஒக். 17

தொடர்ச்சியாக பெய்து வரும் மழைகாரணமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அயகம பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால்நேற்று இருவர் பலியானார்கள்.

இதேவேளை காலி மாவட்டம் வத்தேகம பகுதியில் 50 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. இரண்டாயிரம் பேர் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

(இ-5)

## கை, கால் கட்டப்பட்ட நிலையில் கிணற்றில் இளைஞன் சடலம்

### புற்றளைப்பகுதியில் சம்பவம்

நெல்லியடி, ஒக். 17

தென் புலோலி, புற்றளை பிள்ளையார் கோயில் கிணற்றிலிருந்து கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 22) என்பவரின் சடலமே கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது

இவரது சடலம் நேற்று மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனையும், மரண விசாரணையும் நடத்தப்பட்டன.

பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட பதில் வைத்திய அதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக
சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட

**திரு. ஆறுமுகம் ஜெயபாலன்**
(ஓய்வு பெற்ற நில அளவையாளர், R. M. C.)

அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. தா. நாகபாஸ்கரன்
திரு. இ. இராசலிங்கம் } குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(சி/9392)

# வாழ்த்துகின்றோம்

பிரதிக்கல்விப்பணிப்பாளர் – சங்கீதபூஷணம்

**சு. கணபதிப்பிள்ளை**

அவர்களின் சமய, சமூக கல்வி, இசைப் பணிகளைப் பாராட்டி இன்று நடத்தப்படும் மணி விழா மிகுந்த மகிழ்ச்சிக்குரியதே. இன்றைய நன்நாளில் நாம் வாழ்த்துகின்றோம்.

திருமதி அன்பரசு கதிர்காமநாதன்
ஆசிரியை, சித்தன்கேணி.
(சி/9388)

# பாலர் பாடசாலை ஆசிரியை பதவி வெற்றிடம்

மெதடிஸ்த திருச்சபை பரி. பேதுரு கில்னர் பாலர் பாடசாலைக்கு ஆசிரியை தேவை.

தகைமைகள்:
க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்திய டைந்திருத்தல் வேண்டும். பாலர் பயிற்றப்பட்ட ஆசிரியையாகவும் அல்லது பாலர் பாடசாலையில் கல்வி கற்பித்த அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள விவரம் பேசித் தீர்மானிக்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை சுய விவரங்களுடன் 30 – 10 – 1999 ற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

தொடர்பு: முகாமைக்குரு,
மெதடிஸ்த திருச்சபை,
இல.9, வேம்படி வீதி, லொக்வூட் ஹவுஸ்,
யாழ்ப்பாணம்,
(70045)

SALE SALE

இதோ!
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!
மகாநதி வழங்கும்
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
19-10-99 முதல் 07-11-99 வரையுமே
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடவை ரகங்களுக்குக் கழிவு உண்டு.

மகாநதி
புடவை அகம்
(முகூர்த்த பட்டுப் புடவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T. P. 2552

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ் துணிவகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறைகள்

16, நவீன சந்தை,
(மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

நவீன சந்தை,
(மேல்மாடி)
சாவகச்சேரி.

[சி/9383]

# வாணி விழாக்கள்

நல்லூர் சயன்ஸ் அக்கடமி கல்வி நிறுவன வருடாந்த வாணி விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாணவர் தலைவர் ப. டினேசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக 'பொஸ்கோ' நிறுவன உரிமையாளர் ம. சி. சந்திரபோஸ் கலந்து கொள்வார். (இ-6)

★ ★ ★

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை கலைக்கல்வி நிறுவனத்தின் வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று நண்பகல் 12 மணி முதல் நிலைய நிர்வாகி செல்வி கவிதா நடராசா தலைமையில் நடைபெறும்.(இ-க-100)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை பாரதி கான சபா நடத்தும் நவராத்திரிச் கலை விழா கடந்த ஞாயிறு முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. சங்கீத இசைக் கலைஞர்களின் கலை நிகழ்வுகள் தினசரி மாலை 4 மணிக்கு நடைபெறுகின்றது. விஜய தசமி தினத்தன்று விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் செ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். (இ-30)

★ ★ ★

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் நடத்தும் வாணி விழா, இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு க. பரமநாதன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் கோண்டாவில் இந்துமகாவித்தியாலய மாணவர்களின் நடனமும், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கத்தின் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ-109)

# சமய அறிவு போட்டி

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தால் சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. மூன்று பிரிவுகளாக இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் இம் மாத இறுதிக்குள் விண்ணப்பங்களை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது (ஐ-27)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
சிரஞ்சீவி – ரம்பா
நடித்த
சிங்கநடை
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69879)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய் -சங்கவி-சுவாதி
நடித்த
செல்வா
20 ஆம் திகதி முதல்
மறுமலர்ச்சி
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70042)

ராஜா
யாழ்ப்பாணம்
அர்ஜுன் – குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
10-30, 2-00, 5-00
(இ/9305)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூதப்பிள்ளை கதிராசிப்பிள்ளை

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும்கொண்ட பூதப்பிள்ளை கதிராசிப்பிள்ளை அவர்கள் வியாழக்கிழமை (14-10-1999) காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் 15-10-99 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பரமேஸ்வரி ஜெயரவீந்திரன்
(மகள்)

ஜயா அகம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
[70046]

## காசிப்பிள்ளை சசிகுமாரன்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காசிப்பிள்ளை. சசிகுமாரன் 15-10-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை ஞானம்மா தம்பதிகளின் புதல்வனும் தம்பிஐயா, கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் பக்தரூபன், தயரூபன், கிருபன், கருஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமாரன் [மங்கை ஸ்ரோர்ஸ் கரந்தன் நீர்வேலி], சிவனேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் சகோதரனும் ஜெகதீஸ்வரன், மலர்சோதி, தயாபரன், அருளானந்தம், பாலசுந்தரம், சிவானந்தன், ஜாமினி, இராசமலர், பாலசுப்பிரமணியம், கணேசு [யாழ். கல்வி வலயம்] ஆகியோரின் மைத்துனரும் பாலசிங்கத்தின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகளுக்காக பூதவுடல் கனடாவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. கா. நந்தகுமாரன்
[சகோதரர்]
சி. கணேசு
[மைத்துனன்]

மங்கை ஸ்ரோர்ஸ்,
கரந்தன்,
நீர்வேலி.
[70053]

## கதிரிப்பிள்ளை மூத்ததம்பி

(முன்னாள் ஊழியர் — சிமெந்துத் தொழிற்சாலை)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை மூத்ததம்பி அவர்கள் 16-10-99 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் இராஜரட்ணம் (ஊழியர் - சிமெந்து தொழிற்சாலை), நவரட்ணம் (கண்ணன் - பிரான்ஸ்), கமலாதேவி, ஜெயரட்ணம் (தேவன் - சவூதி), விஜயரட்ணம் (சோதி - ஜேர்மனி), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை), பாக்கியராணி, நாகநந்தினி, ரதி, பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (17-10-99) காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜரட்ணம்
(ராசன் – மகன்)

தற்போதைய முகவரி:
பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(70035)

## வெங்கையா தனலட்சுமி

(சொக்கம்மா)

மாவிட்டபுரம் மடத்தடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது திருகோணமலையில் வசித்தவருமாகிய வெங்கையா தனலட்சுமி (சொக்கம்மா) 15-10-99 வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெங்கையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பகவதி, முருகேசு, நல்லதம்பி, மற்றும் மகேஸ்வரி, சொக்கலிங்கம், பேரம்பலம் (செல்லத்தம்பி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மகாலிங்கம், நாகேஸ்வரி, தருமலிங்கம், சுந்தரலிங்கம் (அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி திருகோணமலை), லோகேஸ்வரி, தனபாலசிங்கம் (ஜேர்மனி), குணபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகராஜா, ஞானேஸ்வரி, றாகினி, தேவசீலன், புஸ்பராணி, சாந்தினி(ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சக்திவேல் (பிரான்ஸ்), மஞ்சுளா, கௌதமி, கம்சாயினி, குணாயினி, ரஜீவ், சஞ்சீவ், கோபினி, வேணுகோபால், சிவகரன் அருள்ராஜ், ஜெயராஜ், பிரதீபன், நந்தகோபன், கோபரன், சுமங்கல்யா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-10-99) ஞாயிற்றுக்கிழமை தொழில் நுட்பக்கல்லூரியின் திருகோணமலை அதிபர் விடுதியில் நடைபெற்று பூதவுடல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெ. தேவசீலன்
(மருமகன்)

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.
(70021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்களின்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

# மணி விழாச் சிறப்பிதழ் (17-10-99)

## ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!

சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் மனிதனாக வாழ்வதற்கு தெய்வ நம்பிக்கையும் நல்ல சிந்தனையும் அமைய வேண்டும். இவ்விரண்டையும் ஒருங்கே அமைந்தவர் திரு. கணபதிப்பிள்ளை. இசைத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து நீண்ட காலமாக சேவை செய்பவர். தமிழ் நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் "சங்கீத பூஷணம்" என்னும் பட்டம் பெற்று தனக்கு என ஒரு பாணியை அமைத்துக் கொண்டு எல்லோரையும் கவரக் கூடிய வகையில் இசை அர்ப்பணம் செய்வதில் தனித்துவமானவர். சிறுவர் முதல் பெரியோர் வரை இவரைத் தெரியாதவர் இலர். எல்லோரிடமும் இனிமையாக பழகுவதிலும் எளிமையான உடை அணிந்து கொள்வதிலும் தனித்துவமானவர்.

60 ஆவது ஆண்டுகள் இம் மண்ணிலிருந்து இன்னோரன்ன பணிகளைச் செய்த சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டி விழா எடுக்கும் வழக்கம்பரை வாழ் மக்களை வாழ்த்துகின்றோம். திரு. கணபதிப்பிள்ளை தம்பதியினர்கள் இன்று போல் என்றும் நிறைவான வாழ்வு வாழ்ந்து இசைக்கும் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றி இன்னும் பல இசைவாணர்களை உருவாக்கித் தந்து மண்ணில் நல்ல வண்ணம்வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய ஸ்வாமிகள்

## மணிவிழாக் குழுவின் தலைவர் தரும் ஆசி

பேரன்புடையீர்!

பொன்னாலையம்பதி சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளை அவர்களது மணிவிழாவின் போது ஆசிகள் கூறுவதையிட்டு மிகவும் பெருமிதம் அடைகின்றோம்.

நாயன்மார்கள், தீட்சகர்கள் போன்றோர் ஆண்டவனை இசையில் பாடி முத்தி பெற்றார்கள். இவ்வாறான புனிதமான இசையையும்நாடகங்களையும்குருசிடமுறையில் சிறுவயது முதல் பெரிய தந்தையாராகிய வரகவி பே. க. கிருஷ்ணபிள்ளை அவர்களிடம் பயின்று, பின்னர் இந்தியா சென்று அங்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வித்தகத்திறமையினால் பிரதிக் கல்விப் பணிப்பாளரானார்.

தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் சங்கீதபூஷணம் அவர்கள் சகல சௌபாக்கியங்கள் பெற்று மேலும் சங்கீதத் துறைக்கு வேண்டிய பணிகள் செய்து சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல அம்பிகையைத் தொழுது எமது ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'ஓம் சாந்தி'


"பாடிப் பணிதலன்றி பிறிதொன்றும்
காண்கிலேன்"

சிவஸ்ரீ சு. சுந்தரராஜ குருக்கள்
மணிவிழா குழுத் தலைவர்.
மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்,
வழக்கம்பரை,
தொல்புரம், சுழிபுரம்.

## பாடல் படைக்கின்றேன் நீடு வாழ்க!

தன்னாலே ஆகாத தெதுவு மில்லை
சங்கீதம் நகைமொழிகள் ஆட்ட
ஓட்டம்
பொன்னான பேச்சினிமை பொழுதெல்
லாமே
புரிந்தின்பம் காணுகிற போக்குள்
ளாராம்
பொன்னாலைக் கிருஷ்ணரின்
பேர்விளக்கும்
பெரியர்கல்விப் பணிப்பாளர் விழா
காண் வேளை
என்னாலே பிறிதென்ன செய்ய லாகும்
இப்பாடல் படைக்கின்றேன்
நீடு வாழ்க!

— மன்னவன்



## நித்தியம் வாழி நிலைத்து!

ஏழு சுரங்கள் எனிலவற்றைப் பன்னூறாய்
வாழவைப் போரிசையில் வல்லோராம்—ஆழமிக
வித்துவம் மிக்கவரில் மிக்க கணபதியார்
நித்தியம் வாழி நிலைத்து.

— சொக்கன்

தங்குபொன் னாலைவர கவிகிருஷ்ண பிள்ளையின்
தம்பிதரு தவமைந்தனே
சங்கைதரு சங்கீத வேதமலை யேகலைச்
சான்றோர்கள் புகழ்வாரியே
பொங்குசுர லயகான மணிகணப திப்பிள்ளைப்
புனிதபெயர் தாங்கும் அன்பா
செங்கதிர வன்காலம் சுகசெல்வ முடன்வாணி
திருவருள் செழித்துவாழி.

— அருட்கவி சீ. விநாசித்தம்பி

## செந்தமிழ் இசைப்பவர்

பல்லவி

மணிவிழா கண்டு களிப்போம் — இந்த
மாநிலம் புகழ்ந்திடும் மகான் கணபதிப்பிள்ளை

அனுபல்லவி

அணி அலங்காரம் செய்த அரிப விற்றோ றியாவில்
பணியென வந்துபாடி பலரும் கொண்டாடுகின்ற

சரணம்

வந்தனை செய்பவர் சிந்தனைக்குரியவர்
வாழ்த்துவோர் தங்களை ஏத்துதல் செய்பவர்
அந்தமில் கலைஞான அறிவினில் வல்லவர்
அம்பிகை பங்கனை நம்பியே வாழ்பவர்

தேனெனப் பாகென தெவிட்டிட இனிப்பவர்
சிந்தையில் உயிரென செந்தமிழ் இசைப்பவர்
மானெனும் சந்திரபூபதி மகிழ்ந்திட
வையத்தில் வாழ்பவர் தெய்வ சிந்தையினர்

இணுவில் ஆசிரியர் அளவை வாசல்.

## இசைப் பேரறிஞ வாழிய நீடே!

அகவற்பா

தமிழும் இசையும் வளர்த்ததான
தனிப் பெரும் மரபில் உதித்தே இசையில்
ஆர்வம் கொண்டே அரிதின் உழைத்தனை!
பல்கலை வளர்த்துப் பல்லாயிரவரை
நல்லுலகிற்கு நல்கிய பெருமைசேர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே
ஆர்வம் தீர இசையெனும் அமுதினை
உண்டே இசைப் பேரறிஞன் ஆயினை!
தனித்தமிழ் இசையினை உயிரெனப் பேணிய
தண்டபாணி தேசிகரிடத்தும்
ரங்காச்சாரியார் வித்துவானிடத்தும்
ஒழுங்குறக் கற்று முதலாம் வகுப்பிற்
சித்தி எய்தினை வித்தகன் ஆயினை!
தேர்ச்சி பெற்றே ஈழம் திரும்பி
இசை ஆசிரியனாய்த் தொழில் மேற்கொண்டனை!
அவ்வேளையிலே ஈழ நாட்டின்
இசை அரங்கினிலும் ஆலயங்களிலும்
திசை தொறும் நிகழ்ந்த சீரிய விழவினும்
இசையெனும் மழையைக் குரல்வளம் விளங்கவும்
ஞானம் விளங்கவும் பொழிந்தனை! அதனால்
பேரும் புகழும் ஒருங்கே பெற்றனை!
கல்வித் துறையில் அதிகாரியாகிக்
கருத்தரங்கு ஆயிரம் வரையிற் கலந்து
இசை வளர்ந்திடவே இன்னுரை ஆற்றினை!
ஞானம் குரல்வளம் உழைப்பினிற் சிறந்தே
ஞாலம் வியக்க பணி புரிகின்ற
கணபதிப் பிள்ளையாம் இசைப் பேரறிஞ!
எல்லாம் வல்ல தெய்வ அருளால்
வாழிய நீடு! வாழிய நீடே!

— புலவர் ம. பார்வதிநாதசிவம்

## கல்விச் செயலரின் வாழ்த்து

தமிழகத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று அறிவியற் கல்வியில் சங்கீதத் துறையில் முறைப்படி ஐந்து சங்கீத பூஷணப் பட்டத்தைப் பெறறு இசையாசிரியரானார். இசையால் இறைவனையும் வயப்படுத்தலாம் என்பதற்கமைய இசைப் பிரியர்களைக் கவர்ந்து பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

தற்பொழுது மணிவிழாக் காணும் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் கல்விசார் நிறுவனங்களிலும் வெளியுலகிலும் அளப்பரிய சேவையினை இசைத்துறைக்கு ஆற்றியுள்ளார். சுரவேக வித்தகன், இன்னிசை வேந்தன் போன்ற பல பட்டங்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். மிகச் சிறந்த கலைக் குடும்பத்தில் வந்த இவர் பிரபல அண்ணாவியார் பொன்னாலை கிருஷ்ணனின் பெறா மகனாகவும் நல்ல சங்கீத வித்துவானாகவும் விளங்குகின்றார். இலங்கை வானொலியில் பல இசைக் கச்சேரிகளை வழங்கியுள்ளார். இசைத் துறையோடு நாடகங்களிலும் பல்வேறு பாத்திரமேற்று நடித்துப் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

யாழ்ப்பாணத்திலேயே பல இசையாசிரியர்களை உருவாக்கியுள்ள திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் எமது கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு 1997 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடத்திய இசைவிழாவிலே சிறப்புக் கச்சேரி ஒன்றினை நடத்தி பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அளப்பரிய சேவையினை இசைத்துறைக்கு கடந்த பல ஆண்டுகளாக ஆற்றி மணிவிழாக் காணும் அன்னாரைப் பாராட்டுவதிலும். வாழ்த்துரை வழங்குவதிலும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு — கிழக்கு மாகாணம்,
திருமலை.

## மாகாணக்கல்விப்பணிப்பாளர் மனதார வாழ்த்துகிறார்

எனது பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு மணி விழாக் கொண்டாடும் வேளை இச்செய்தியை அனுப்புவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சு. கணபதிப்பிள்ளை அவர்களின் தேருருவம் என் மனதை விட்டு நீங்கியதில்லை அவர் தேனோசை என் காதில் மீட்காத கணமும் இல்லை. அவ ஒய்யாரம், ஓங்காரம், அலங்காரம், ஆலாவரணம் எல்லாம் பொலிவாகப் பூத்த பெருமகன். இவரின் பகிடிகளும், பமபல்களும் எம் அனுபவங்களுக்குச் சுவை ஏற்றின, இவரை என்னால் மறக்கவே முடியாது.

யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளுக்கு இவர் ஆற்றிய சேவையை நாம் பெரிதும் மதிக்கிறோம் பாடசாலைகள் தோறும் சென்று இவர் வழங்கிய பயிற்சிகள், அறிவுரைகள் எங்கள் மாணவர்களின் அழகியல் ஆர்வத்திற்கு ஆதாரமாக இருந்தன.

பாடசாலைகளுக்குக் குழுவாகவோ, அல்லது தனியாகவோ இவர் மேற்பார்வை செய்யும் பொருட்டுப் போகும் வேளைகளில் இவருக்கு விசேட வரவேற்புண்டு. வகுப்புகளுக்குச் சென்று மாணவரோடு பாடி, ஆடி ஆனந்தமாக்கி சங்கீதத்தில் ஆர்வத்தை ஊட்டுவார். அழகியல் ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்த போதும் எல்லாப் பாடசாலைகளிலும் பண்ணிசை பாடவைத்த பெருமை இவரையே சாரும்.

இவர் கடமை உணர்ச்சிமிக்கவர் இதனால் தான் இவர் மீது நான் அன்பும் ஆசையும் கொண்டேன். யாழ்ப்பாணத்து வாழ் நாள்களில் 93—95 காலப்பகுதி ஏனையவற்றிலும் பார்க்க வேறுபட்டது. தொல்லைகளும், துயரங்களும் மிக்க காலம்; அல்லல்களும் அவலங்களும் பெருகிய நாள்கள் அவை. இக் காலகட்டத்தில் இவர் பட்ட கஷ்டங்கள் நம் கண்களைக் கலங்க வைக்கக் கூடியவை.

இவரின் ஓய்வுக்காலம் இனிதே அமைய வாழ்த்துகிறேன்.

ச. சந்தசாமி
மாகாணக் கல்விப்பணிப்பாளர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் சிறப்பிதழ் தொடர்ச்சி ....

## விழா நிகழ்ச்சி

காலம்: **17-10-99** ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணி

இடம்: யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
பிரதான மண்டபம்

தலைவர்: திரு. செ. பத்மநாதன்
(இளைப்பாறிய அதிபர், யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

### நிகழ்ச்சி நிரல்

காலை 8.00 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலிருந்து விழா நாயகரை தம்பதி சமேதராய் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லல்.

இறைவணக்கம்: திருமதி சாரதா பரஞ்சோதி
(சங்கீத ஆசிரியை, யா/ சங்கானை சிவப்பிரகாச ம. வி.)

வரவேற்புரை: பண்டிதர் ப. இராஜநரு

தலைமையுரை:

ஆசியுரை: சிவஸ்ரீ சு. சுந்தரராஜக் குருக்கள்
(விழாக் குழுத் தலைவர்)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமஹா சந்நிதானம்)

அருட்திரு. கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்
(அதிபர், புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை)

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

அருட்கவி சீ. விநாசித்தம்பி
(தலைவர், இந்துசமயப் பேரவை)

நூல் வெளியீடு:

வெளியீட்டுரை: சைவப்புலவர் சு. செல்லத்துரை
[இளைப்பாறிய அதிபர், யா/இளவாலை மெ. ம. வி.]

அறிமுக உரை: திரு. து. வைத்திலிங்கம்
[மேலதிக அரசாங்க அதிபர்]

ஆய்வுரை: கலாநிதி காரை, சுந்தரம்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]

முதற்பிரதி பெறுபவர்:
வைத்திய கலாநிதி திருமதி பவானி சந்திரகுமார்
[யாழ். போதனா வைத்தியசாலை]

வாழ்த்துப்பா பாடி வழங்கல்:
சங்கீதபூஷணம் வ. உருத்திரன்
[இளைப்பாறிய ஆசிரியர், யா/ விக்ரோறியாக் கல்லூரி. சுழிபுரம்]

பொன்னாடை போர்த்தல்:
பண்டிதர் அ. ஆறுமுகம்
(பெருந்தலைவர், வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம்)

பட்டமளித்துக் கௌரவித்தல்:
''சுரலயகானமணி'' என்னும் பட்டம் வழங்கல்
மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர்

**பாராட்டுரைகள்:**

திரு. வீ. இராசையா
கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்.

திரு. சி. சிவராசா
கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்.

திரு. ப. விக்னேஸ்வரன்
கல்விப் பணிப்பாளர், தீவக வலயம்.

திருமதி செ. மகாலிங்கம்
கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்.
உப தலைவர், வட இலங்கை சங்கீத சபை.

திருமதி றெஜினா இருதயநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்.

திரு. நா. வரதராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயம்.

திரு. அ. தற்பரானந்தம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்.

திரு. ஆ. வ கணேசலிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்.

திரு. சி. செல்லையா
உதவிக் கல்விப் பணிப்பாளர், சங்கானை.

திரு. க. தனபாலசிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்.

திரு. ப. திலகநாயகம் போல்
உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.

திருமதி அ. வேலுப்பிள்ளை
அதிபர், யா/ விக்ரோறியாக் கல்லூரி.

திருமதி பண்டிதை பொன் பாக்கியம்
இளைப்பாறிய ஆசிரியை

நன்றியுரை: திரு. தி. மதிவதனன்
(ஆசிரியர், யா/யாழ்ற்றன் கல்லூரி - விழாக்குழு செயலாளர்)

அனைவரும் தவறாது சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மணிவிழாக் குழுவினரும்
நூற்றாண்டுவிழாச் சபையினரும்

## கடமையுணர்வு மிக்க சங்கீதப் பெருந்தகை

16-10-1939 இல் பிறந்த இவர் 07-09-1966 இல் சங்கீத ஆசிரியராகவும், 01-05-1977இல் சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் நியமனம் பெற்று, இன்று அழகியல் துறை சார்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்து நிறைவுபெற்று ஓய்வு பெறுகின்றார். இளமை தொடக்கம் இற்றை வரை இசையைத் தன் உயிராகக் கொண்டு வாழ்ந்து சிறப்பாகக் கல்விப் புலத்துக்கு அரும் பணியாற்றிய தற்பெருமை கொள்ளாத பண்பாளராவார். வடஇலங்கை சங்கீத சபையை இன்று வரை அலங்கரித்து அவற்றின் மேம்பாட்டிற்காக உழைத்து இசைவழி நின்று கடமைபுரிந்து பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றார்.

1994 இல் கிராகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அழகியல் ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சியில் விரிவுரையாளர் பெருந்தகையாக கண்டு பெருமிதம் அடைந்தேன்.

தனது சேவைக் காலத்தில் துறைசார்ந்த பிரிவை நிர்வாகத்தில் இலகுபடுத்தினார். அன்புடன் பழகி அனைவரையும் கவர்ந்து விடுவதோடு கடமையுணர்வுடன் நிர்வாகத்தில் பக்க பலமாக நின்று பணிபுரிந்தார். அவர் ஓய்வு பெற்று இன்புற்று வாழ பிரார்த்திக்கும் அதே நேரம் அவரது உதவி ஒத்தாசைகள் தொடர்ந்தும் கல்விப்புலம் சார்ந்த எங்களுக்குக் கிடைக்கும் என்பதிலும் அசையாத நம்பிக்கை உண்டு.

வீ. இராசையா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.

## பஜனைச் சபையார் வாழ்த்துகின்றனர்

சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்கள் கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் நாள் இன்றாகும். இந் நாள் முதல் இவர் வாழும் காலம்வரை ஆலயங்கள் தோறும் பாடி மகிழும் காலமாக அமைய வேண்டும் என்பது பஜனைச் சபையாரின் வேண்டுதலாகும்.

ஊஞ்சல், தேவார பண்ணிசைகள் பாடுவதில் வல்லவராக விளங்கும் இவர் யாவரையும் தான் பாடும் பாடல்களைக் கேட்கச் செய்வதில்—சபையினரைத் தம்பக்கமாக்குவதில் திறமையுடையவராவார். இத்திறமை எமது பகுதி ஆலயங்களுக்கு நன்கு பயன்பட வேண்டும்.

திருவாசக விழாக்களை வாய்ப்புக்கள் ஏற்படும் காலம்தோறும் நடததி எங்கும் பக்தி வளர வழி செய்யும் ஒரு தொண்டராக இவர் உழைக்க வேண்டும். பஜனைச் சபையாரின் அன்பு வேண்டுதலை ஏற்றுமகிழ்வார் என்று நம்புகின்றோம், எங்கள் வேண்டுதலை நிறைவு செய்ய இவர் எல்லா நலன்களையும் பெற்று வாழ வழக்கம்பரை அம்பாள் அருள்புரிய நாம் அம்பாள் பாதங்களை வணங்குவோம்.

பஜனைச் சபையார்

வழக்கம்பரை,
சுழிபுரம்.

**சங்கீத பூஷணம்**
**சு. கணபதிப்பிள்ளை அவர்களின்**
**மணிவிழா அன்று**
**பாராட்டிப்பாடிய**
**கழிநெடிலாசிரிய விருத்தத்தின்**
**சில அடிகள்**

## நெடும்புகழொடு வாழ்ந்திடவே!

சங்கீத மென்னுஞ் சாகரத் தெடுத்த
தனிப்பெரு முத்தென மதிக்க
சிங்கார மான மேடைக ளேறி
சிறந்தபல் வாத்தியம் முழங்க
மங்காத இனிமை வானமும் ரசிக்க
வையகம் களித்திடப் பாடி
பங்கான கீத வித்துவான் களிடை
படைத்தனர் ஓரிடந் தனக்கே.

அருமை யாகிய ராகதா னங்கள்
அமையப் பல்லவி பாடிடும்
பெருமை சான்றசங் கீத பூஷணம்
பெற்ற நற்கண பதிப்பிள்ளை
உரிமை சேர்தரு மிலங்கை வானொலி
உயரிடத்திலும் ஒருவராய்

அன்ன வானுயர் கணபதிப்பிள்ளை
அரிய சேவைபா ராட்டியே
பன்ன ரும்பெரு மன்ப ராசிரி
யர்கள் தொண்டர்களனை வரும்
மன்ன வன்னிவ னென்று கூடி
மதித்துக் கன்னிநன் மாதத்தில்
பொன்னின் மாமணி விழா வெடுத்தனர்
போற்றி மாலைகள் சூட்டியே.

மனம்போல வாழுங் கணபதிப்பிள்ளை தம்
வாழ்க்கைநல் துணைவியா ருடனே
இனம்போல வாழும் ஏற்ற சங்கீதத்
தினியவர் போற்றவெந் நாளும்
தினந்தோறும் பெருமான் திருவடி தொழுது
சிந்தித்திவ் வையகத்திருக்க
நினைந்தேபல் லாண்டு பாடியே துதித்தேன்
நெடும்புக ழோடு வாழ்ந்திடவே.

புலவர் வை. க. சிற்றம்பலம்

## வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17
கைதடி கல்விக்கழகம் நடத்தும் வாணிவிழா இன்று பகல் ஒரு மணிக்குகைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
கல்விக்கழக இயக்குநர் அ. லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.
(க-5)

★ ★ ★

குருநகர்; ஒக். 17
யாழ். கல்வி வலயத்தின் நவராத்திரிவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் யாழ். கல்வி வலய நலன்புரிக்கழகத் தலைவர் க. நாகராசா தலைமையில் நடைபெற உள்ளது.
(க-51)

★ ★ ★

நெடுந்தீவு, ஒக். 17
நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் பிரதேச சபையில் நாளை திங்கட்கிழமை நவராத்திரிவிழா நடைபெறவுள்ளது.
(க-111)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 17
அரியாலை கல்விக்கழகம் நடத்தும் வாணி விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.
இந்த விழாவில் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.
(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 17
வலிகாமம் கல்வி வலயத்தின் வாணி விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலய நலன் புரிக்கழகத் தலைவர் ச. வீரசிங்கம் தலைமையில் நடைபெறும்.
(க-152)

★ ★ ★

சுன்னாகம், ஒக். 17
சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய நவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.
இவ்விழாவில் பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களின் ''திருநீலகண்டர்'' வில்லிசை இடம்பெறும்.
(க-27)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 17
இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.
(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 17
நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர் நடத்தும் வாணி விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் வித்துவான் க. சொக்கலிங்கம், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
நல்லூர் உற்சவ காலத்தில் மேற்படி நிலையத்தினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (ஐ-க)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன், ஒக். 17
புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு விஜயதசமி விழா இடம்பெறும்.
அன்று ஏடு தொடக்குதல் மற்றும் ஆயுத பூசை என்பனவும் இடம்பெறும. (ம-133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தல் நாடகங்கள்

இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் ஒன்று நடைபெறப் போவது நிச்சயமாகிவிட்டது. அதனால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான திட்டங்களை வகுப்பதிலும், அவற்றைக் கவர்ச்சிகரமாகச் செயற்படுத்துவதிலும் தென்னிலங்கை அரசியல் அணிகள் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டன.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகக் 'கைவிடப்பட்ட' நிலையில் இருந்த இனப்பிரச்சினை விவகாரத்தை ஆசையோடு அள்ளி முத்தமிட்டுப் பாசத்தைப் பொழியப் போகின்றன பிரதான கட்சிகளான ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும். இந்தப் பாசம் பொழிதல், ஏற்கனவே சிறிய அளவில் தொடங்கிவிட்டது.

இனிமேல் அது பெரிய அளவில் அரங்கேறப் போகிறது என்பதற்கான சமிக்ஞையே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி சந்திரிகா எழுதிய நீண்ட கடிதம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிக்கு லியம் பொக்ஸ் உடன்பாட்டின் அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இம்மாத முற்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டாளர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

ரணில் இதனை ஒரு தேர்தல் காயாகவே (மறைமுகமாக) நகர்த்தினார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இதுவரை செயலளவில் முற்றிலும் வேறுபாடான அணுகுமுறையைக் கையாண்டு வந்த ஐ. தே. க இப்போது அதனை மாற்றவுள்ளது என்பதற்கான வெளிப்பாடாகவே ரணிலின் பேச்சு அமைந்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு எனும் பந்தை 'நசுக்கிடாமல்'' அரசாங்கத்தின் பக்கத்திற்கு அடித்துவிடும் முயற்சி அது. இதனைக் கண்ட ஜனாதிபதி முற்று முழுதாகவே பந்தை எடுத்து எதிர்க்கட்சியின் [ரணிலின்] பக்கத்துக்கு (தமது கடிதத்தின் மூலம்) வீசியுள்ளார்! ரணிலை முந்திக் கொண்டார் என்றும் சொல்லலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உள்ள தடங்கலுக்கும் தாமதத்துக்கும் ஐக்கிய தேசியக்கட்சியே காரணம் என்று தோல் உரித்துக் காட்டுவதாக ஜனாதிபதியின் 12 பக்கக் கடிதம் விரிந்து செல்கிறது.

பிரிட்டிஷ் முன்னாள் துணை வெளிநாட்டு அமைச்சர் லியம் பொக்ஸ் முகதாவிலான இணக்கம் எப்படி உண்டாகியது, அதனைச் செயற்படுத்துவதில் ரணில் எவ்வாறு அசமந்தமாகவும் ஒத்திப்போடும் தந்திரத்துடனும் நடந்து கொண்டார் என்பவற்றை 'அம்பலமாக்கி' தாம் நல்ல பிள்ளைப் பட்டம் வாங்கமுயற்சிக்கிறார் சந்திரிகா.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நிபந்தனைகள் விதித்து வருவது போலவே, ரணிலுடன் தாம் பேசுவதற்கும் நிபந்தனைகள் விதித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா. அந்த நிபந்தனைகள் நியாயமானவை என்று தர்க்க ரீதியாகவும் காட்ட முனைந்திருக்கிறார்.

எதுவானாலும், முந்திய தடவைகள் போல தெற்கின் அரசியல் தலைவர்கள் அரங்கேற்றும் கவர்ச்சியான தேர்தல் நாடகங்களைக் கண்டு தமிழ் மக்கள் இலகுவில் ஏமாந்துவிட மாட்டார்கள். இரண்டு தரப்புகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதனை அவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

வர்த்தகத் தூதுக் குழுவின் முயற்சியை அடுத்து

# புலிகளுடன் ஒப்பந்தம் செய்வது பற்றி

# அரசும் - எதிர்க்கட்சியும் இணக்கம்

கொழும்பு, ஒக். 17

இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்பதில் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள தென்பகுதி வர்த்தகத் தூதுக்குழு தலைமையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற நான்காம் கட்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தையின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தைஇணைப்பது உட்பட அதிகாரப் பரவலாக்கல் பற்றி பேச்சுவார்த்தைகளை விரிவாக்குவதற்கு முதலில் விடுதலைப்புலிகளுடன் உடன்பாடு ஒன்று செய்யப்பட வேண்டும் என இருதரப்பினரிடையேயும் இணக்கம் ஏற்பட்டது. இதற்கமைவாக இருதரப்பினரையும் மையப்படுத்திய பொதுவான குழு ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் குறித்த ஒப்பந்தம் தொடர்பாக தூதுக்குழுவின் தலைவர் வலித் கொத்தலாவல புலிகளுடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும் எனவும் அங்குமுடிவு எடுக்கப்பட்டது.

நான்காம் கட்ட முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத் தரப்பில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், அமைச்சர் அஷ்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர். எதிர்க்கட்சி சார்பில் ஜே.என்.ஆர். சொக்ஷி, றொணிடி மெல், டி. என். சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். [ஐ]

## சிறுவர்களுக்கு லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

நல்லூர் லயன்ஸ் கழகம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் சிறுவர் முகாம் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளது.

இந்த முகாமில் மேற்படி வித்தியாலயச் சிறுவர்களுக்கு பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள், உடுதுணிகள், பல் தூரிகைகள், பற்பசைகள் என்பன அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

நல்லூர் லயன்ஸ் கழக அங்கத்தினர்கள் அன்றைய தினம் இல்லச்சிறார்களுடன் சேர்ந்து மதிய உணவினைப் புகிர்ந்துண்பர் என்று லயன் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். (க)

## விசேட பயிற்சி

திருநெல்வேலி, ஒக். 17

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையிலுள்ள பாலியல் நோய்ப்பிரிவு சுகாதார பரிசோதகராக அண்மையில் நியமனம் பெற்ற எஸ். நக்கீரன் கொழும்பு பாலியல்நோய் தடுப்பு மத்திய நிலையத்தில் விசேட பயிற்சி பெறுவதற்காக கொழும்பு சென்றுள்ளார். [ஐ-135]

## மரக்கறி கொள்வனவுக்கு முகவர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நான்கு முகவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன தலைமையில் 512 ஆவது படையணியில் நடைபெற்ற கூட்டத்தில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சுன்னாகம், உடுவில், ஊரெழு, அச்சுவேலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இந்த முகவர்கள் ஆவர்.

இந்த முகவர்கள் தினமும் 1900 கிலோ மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து இராணுவத்துக்கு வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் முகவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறி வகைகள் நியாயவிலையில் கொள்வனவு செய்யப்படுவதில்லையென விவசாயிகள் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இதனையடுத்து மரக்கறிகளுக்கு நியாயமான விலையைத் தீர்மானிப்பதற்கென கூட்டம் நடைபெற்றது.

ஒக்ரோபர் 15 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய மரக்கறிகளின் விலையைத் தீர்மானிப்பதற்கான கூட்டம் கடந்த வாரம் மகாஜனாக்கல்லூரியில் நடைபெற்றது. [இ-10-9]

உணவு முத்திரை மூலம்

## நிவாரணத்துக்கு வழங்கப்படும் பொருள்களும் விலைகளும்

யாழ்ப்பாணம், ஒக். 17

உணவு முத்திரைக்கான நிவாரணம் வழங்குவதற்கான பொருள்களின் விலையும் அளவுகளும் யாழ். செயலகத்தினால் அண்மையில் நிர்ணயம் செய்யப்பட்டன.

சிவப்பு நாட்டரிசி கிலோ 30 ரூபாவுக்கும் வெள்ளைச் சீனி கிலோ 23 ரூபாவுக்கும் மைசூர் பருப்பு கிலோ 40 ரூபாவுக்கும் ஒரு ஹைலன்ட் மா பைக்கெற் 65 ரூபாவுக்கும் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 30. 4 கிலோ அரிசியும் 6 கிலோ சீனியும் 2 கிலோ மைசூர்ப் பருப்பும் 2 ஹைலன்ட் மா பைக்கற்றும்—

4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 23 கிலோ அரிசியும் 5. 2 கிலோ சீனியும் 1 கிலோ மைசூர்ப் பருப்பும், 2 ஹைலன்ட் மாபைககற்றும்—

3 பேர் கொண்ட குடும்பத்துக்கு 21 கிலோ அரிசியும் 4.55 கிலோசீனியும் ஒரு கிலோ மைசூர்ப்பருப்பும் ஒரு ஹைலன்ட்மா பைக்கற்றும் -

2 பேர் கொண்ட குடும்பத்துக்கு 15 5 கிலோ அரிசியும் 3 கிலோ சீனியும் 750 கிராம் மைசூர்ப் பருப்பும் ஒரு ஹைலன்ட் மாபைக்கற்றும்—

ஒருவர் அடங்கிய குடும்பத்துக்கு 7. 2 கிலோ அரிசியும் 1. 5 கிலோ சீனியும் 500 கிறாம் மைசூர்ப் பருப்பும் ஒரு ஹைலன்ட் மாபைக்கற்றும்— வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலவச நிவாரணத்துக்குச் சிவப்பு நாட்டரிசியும் வெள்ளைச் சீனியும் வழங்கப்படவுள்ளதாகவும் —

பழுப்புநிறச் சீனியோ, தரமற்ற அரிசியோ வழங்கப்பட்டால் அதுபற்றி யாழ். செயலகத்துக்குத் தகவல் தருமாறும் கோரப்படுகிறது. (இ-5)

## மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 17

இந்த வருடத்துக்கான நான்காம் கந்தாய மருந்துகள் யாவும் சுகாதாரத் திணைக்களத்தால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகள் அனைத்திற்கும் இவை வழங்கப்பட்டு வருவதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10--59)

## நிவாரணப் பொருளுடன் சென்ற கூ. சங்க லொறி தடம்புரண்டது

### நீர்வேலியில் வெள்ளியன்று சம்பவம்

வடமராட்சி, ஒக். 17

நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடிக்குச் சென்று கொண்டிருந்த நெல்லிபடி — கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறி ஒன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில் தடம்புரண்டது.

நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் லொறி வண்டியின் சாரதியும் கிளீனரும் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றித் தப்பினர்.

லொறியின் முன்பக்க டயர்களில் ஒன்று வெடித்ததனால் பாதையை விட்டு விலகி அருகில் உள்ள வாழைத்தோட்டத்துக்குள் புகுந்து தடம்புரண்டது (ஐ-173-109-180)

## 10 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் மாத இறுதிக்குள் வந்து சேரும்

யாழ். மாவட்ட கோழிப் பண்ணையாளர்களின் நலன் கருதி இம் மாத இறுதிக்குள் மேலும் 10 ஆயிரம் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் கொழும்பில் இருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் எடுத்துவரப்படவுள்ளன.

குஞ்சுகள் தேவைப்படுவோர் தமது பெயர்களை தத்தமது பகுதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

5 ஆயிரம் புறொயிலர் ஒரு நாள் இறைச்சிக்குஞ்சுகளும் 5 ஆயிரம் ஒரு நாள் பேடுக்குஞ்சுகளுமே கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளன. [ஐ-180]

## தும்புத் தொழிற்சாலை வேலணையில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம்,ஒக். 17

பனம் மட்டையின் இருந்து தும்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வேலணைப் பகுதியில் அந்தப் பிரதேச தெங்கு பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினால் நிறுவப்படவுள்ளது.

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்தத் தொழிற்சாலைக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும்—

இந்தத் தொழிற்சாலைக்கென சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்களைப் பனை அபிவிருத்திச் சபை வழங்கவிருக்கின்றது எனவும் —

பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உற்பத்தி செய்யப்படும் தும்பில் கடினமான பிறஸ் மற்றும் துடைப்பங்கள் செய்யப்படும் என்றும் —

அவை கொழும்புக்கும் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். (க-9-5)

## சான்றிதழ் வழங்கல்

வலிகாமம் தெற்கு, ஒக் 17

இணுவில் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபையினரும், இணுவில் இந்து சமய வளர்ச்சிசங்கமும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமய அறிவுப்போட்டியில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசளிப்பும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற உள்ளன.

இச்சமய அறிவுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெறுவோர் விவரம் வருமாறு:-

★ ஆரம்பப்பிரிவு:- துஷ்யந்தி தர்மநாயகம் (இணுவில் மத்தியகல்லூரி)

★ கீழ்ப்பிரிவு:- திருநாவுக்கரசு பிரசாந் (யாழ். இந்துக் கல்லூரி)

★ மத்தியபிரிவு:- தர்சனா சந்திரலிங்கம் (கொக்குவில் இந்துக்கல்லூரி)

★ மேற்பிரிவு:- மாதங்கி அருளானந்தம் [தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி] [ஐ-152]

### உதயவாக்கு

"ஒழுக்கம் என்பது பேராறு; கிளை நதிகள் தாம் நற்பழக்கங்கள்.

- மார்ட்டின்

## நாளை

ஐப்பசி 1

திங்கட்கிழமை

திதி: அட்டமி

காலை 6. 13 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

பிற்பகல் 1.55 வரை

மஹாநவமி நாள்

சரஸ்வதி பூஜை

சுபநேரம்: 12.02 - 1.32

ராகுகாலம்: 7.32 - 9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத் திரைப்படங்களில் பாடி தமிழினிமை பரப்பும் ஈழ இளைஞன்

இப்போது பிரிட்டன், உட்பட உலக நாடுகளில் உள்ள சினிமாத் தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகப்புகழ் பெற்ற ஆங்கிலத் திரைப்பட இயக்குநர் Stanley Kubrick இன் 'ஹொலிவூட்' திரைப் படத்தில் ஈழத்தின் பிரபல பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரன் அவர்களின் தமிழிசை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தில் பிறந்து, லண்டனில் வாழ்ந்துவரும் யோகேஸ்வரன் இந்தப் படத்தில் முக்கிய கட்டமொன்றில் பாடிய தன் மூலம் தமிழின் இனிமையை ஆங்கில சினிமா ஊடாக உலகளாவப் பரப்பிய முதல் தமிழர் என்ற பெருமைக்கு உரியவராகின்றார். கர்நாடக சங்கீதத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற இவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ் நாட்டில் நடைபெறும் மார்கழி மாத இசை விழாக்களில் பாடி சுப்புடு போன்ற விமர்சகர்களால் பாராட்டப் பெற்று புகழ்ந்து எழுதப்பட்டவர்.

Eyes wide Shut என்ற ஹொலிவூட் படத்தில் நாயகனாக வருபவர் நடிக்கும் முக்கிய காட்சியில் காதலா? இன்பமா? இது ஒரு நரகமா? என்று கடினமான ஆலாபரணத்தோடு யோகேஸ்வரன் பாடும் காட்சி ஆங்கில ரசிகர்களையே கவர்ந்து இழுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கர்நாடக இசையில் நன்கு தேர்ச்சிபெற்றவராக இவர் இருந்த போதிலும் ஜேர்மனியின் தலைசிறந்த Jazz இசைக் குழுவான Dissidenten இசைக் குழுவில் கடந்த 5 வருடங்களாகப் பிரதான பாடகராக விளங்குகிறார். லண்டனில் 'சிவனோவா' என்ற இசைக் குழுவிலும் உலகப்புகழ்

### லண்டனிலிருந்து சுதா

பெற்ற ஷோபனா ஜெயசிங்கின் நாட்டியக் கம்பனியிலும் The Shout எனும் மேலைத்தேச சாஸ்திரிய சங்கீத குழுவிலும் இணைந்து பல மேடை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.

தமிழிசை, கர்நாடகஇசை, பக்திஇசை மெல்லிசை போன்ற இசைகளில் பல ஒலிப் பேழைகளை வெளியீடு செய்த இவர் உலகத்தில் முதல் முதலாக 'Tamil Classic' எனும் ஒலிப்பேழையை ஜேர்மனியில் Exil கம்பனி மூலம் வெளியிட்டு மேலைத்தேச ரசிகர்கள் எமது தமிழிசையைக் கேட்டு ரசிக்கும்படி செய்தது அரிய பெரிய சாதனையாகும்.

இவருக்கு லண்டன் முருகன் கோயில் 'கலைமாமணி' பட்டமும், சென்னை அனைத்துலகத் தமிழிசை ஆராய்ச்சி நிறுவனம் 'தமிழிசைஇளவரசு' பட்டமும் வழங்கிக் கௌரவித்தன. இவர் இங்கிலாந்தில் Goldsmith பல்கலைக் கழகத்தில் 5 வருடங்களாக இசை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். சங்கீத பூஷணம் நல்லைக் குமரன் முத்துக்குமாரசாமியிடமும் சங்கீதபூஷணம் பாலசிங்கத்திடமும் பயின்றதை மறக்காமல் இருக்கும் இவர் இந்தியாவின் தலைசிறந்த சங்கீத மேதை ரி. வி. கோபாலகிருஷ்ணனிடமும் பயின்றார்.

லண்டனில் 1985 ஆம் ஆண்டு ஆசிய இசைக் கல்லூரி நிறுவனத்தை ஆரம்பித்து தான் கற்றுத் தேர்ந்த மிருதங்கம், புல்லாங்குழல், சங்கீதம் ஆகிய இசைகளைப் பயிற்றுவித்து வருகிறார். இவரது மாணாக்கர்கள் அரங்கேற்றம் கண்டிருக்கிறார்கள்.

1990 இல் ஈழத்துத் திருத்தலங்கள், கர்நாடக தெரிவுகள், திருமுறைகள் ஆகிய ஒலிநாடாக்களையும் 1993-94 இல் 'வாழ்வே சங்கீதம்' என்ற

### கலைக் கதிர்

நாடாவை வாணி ஜெயராமுடன் சேர்ந்து பாடி வெளியிட்டார். இசையமைப்பாளர் குமாரின் இசையமைப்பில் திருமுருகன் நாடாவைத் தந்தார்.

1997 இல் தனித் தமிழ் கிளாசிக் என்ற சி. டி. யை ஜேர்மனியில் வெளியிட்டார்.

ஈழத் தமிழனின் இம் முன்மாதிரியைப் பின்பற்றி அகிலம் வாழ் ஏனைய தமிழர்களும் தமது முயற்சியை முன்னெடுப்பார்களாக!

(ம)

★

# கறையான் கூடு!

கறையானின் ஒவ்வொரு இனமும் தமது விருப்பத்திற்கேற்ப வெவ்வேறு விதமான கூடுகளைக் கட்டிக் கொள்கின்றன. மண் கூடுகள் ஆனாலும் யாவும் வசதியான வீடுகள் தான். இவற்றின் உயரம் சில அங்குலங்கள் முதல் முப்பது அடிவரை கூட இருக்கலாம். ஆகக் கூடிய அகலம் 15 அடிகள்.

பொதுவாகக் கறையான் புற்றுக்கள் மண்ணிலிருந்தே எழுப்பப்படுகின்றன. கறையானின் உடல் சுரப்பும் புற்று அமைத்தலில் உதவுகின்றது.

சில கறையான்கள் மரத்திலேயே வாழ்வன. இவை மண்ணைப் பயன்படுத்தாமல் தாம் உண்ட — சமிபாடு அடையச் செய்யப்பட்ட மரத்தைக் கொண்டே கூடுகளை அமைக்கின்றன

சில வகைக் கறையான்கள் தமது கூட்டிலிருந்து மண்ணினாலும் உடற் சுரப்பினாலும் குழாய் போன்ற பாதைகளை அமைத்து அவற்றினூடாக சூரிய ஒளியின் தொந்தரவின்றியே உணவுப் பொருள்களைத் தேடிச் செல்கின்றன.

# சமூகத்தின் துன்பங்களோடிணைந்த கற்பனை தாங்கிய 'தடம்' சஞ்சிகை

புதிதாக அரும்பிய வவுனியா வளாகத்தின் பண்பாட்டுக் குரலாகவும், ஆய்வுச்சுவடாகவும், ஏடாகவும் 'தடம்' வெளிவந்துள்ளது. துணைவேந்தரின் வாழ்த்து, வளாக முதல்வரின் பாராட்டு பெரும் பொருளாளரின் ஆசிச் செய்தி முதலாம் அடிச்சுவடுகளோடு தொடரும் இம்மலரில் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், இ. நந்தகுமாரன், தமிழ் மணி அகளங்கன், ந. இரவீந்திரன், க. ஸ்ரீகணேசன், பண்டிதர் க. சச்சிதானந்தம், திருமதி வேணி விஜயராஜா முதலியோர் சிறப்புக் கட்டுரைகளை எழுதியுள்ளனர். ஒவ்வொரு கட்டுரைகளும் ஆக்கி

### நூல் வரிசை

யோரின் கருத்தியற் கோலங்களையும், தனித்துவப் பண்புகளையும் தாங்கி நிற்கின்றன. மேலும் சிந்திக்கத் தூண்டுகின்ற வினா அதிர்வுகளை உள்ளடக்கிய ஆக்கங்களாகவும் காணப்படுகின்றன.

தடத்தில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் முதலியவை வாழ்க்கைப்பின் புலம், பல்கலைக்கழகபின்புலம் முதலியவற்றிலிருந்து கிளர்ந்தெழும் படைப்பாக்கல் மலர்ச்சியின் பளிச்சீடுகளாகவுள்ளன. பல்வேறுவித முரண்பாடுகளின் உதிர்வுகளாயும் உறுத்தல்களாயும் தடத்திலுள்ள ஆக்கப்படைப்புகள் அமைந்துள்ளன.

பல்கலைக்கழக வாழ்க்கை மாணவர்கள் எதிர் கொள்ளும் மனவெழுச்சி சார்ந்த நெருடல்களும், எமது சமூகத்தின் துன்பங்களோடு இணைந்த கற்பனைகளும் படைப்பு வெளிப்பாடுகளாக வந்துள்ளன.

தமிழ் நாடகத்துறை வளர்ச்சியில் பேராசிரியர் சு. வித்தியானந்தனது பங்களிப்பு பற்றிய நமசிவாயம் தயானந்தனது கட்டுரை, நாடகக் கலைஞர் எஸ். ரி. அரசு அவர்களை நேர் கண்டு சுப்ரம் சுரேஸ் எழுதிய நேர்காணல் இலக்கியம் முதலிய ஆக்கங்கள் எமது பண்பாட்டின் தொடர்ச்சியைக் கண்டறிய உதவும் சில வீடுகளை மீளவலியுறுத்திக்காட்டுகின்றன.

இம்மலரிலே குறிப்பிட்டுக் கூறக் கூடிய தனித்துவமான பரிமாணங்களுள் ஒன்றாக அமைவது கந்தையா ஸ்ரீகணேசனுடைய 'சர்வதேச அடிமைகள்' என்ற நாடகப் பிரதி இப் பிரதி நாடகப் பயிற்சிச் செயற்களத்தின் வழிபாகப் பயிலப்பட்டு பாரதி விழாவின் போது மேடையேற்றப்பட்ட செயல் வழிப்பிரதி ஆகும். உலக நாடுகளை நோக்கிய புலப்பெயர்ச்சியும், நிலை பிறழ்ந்த விழுமியங்களும், தனித்தனி உராய்வுமனங்களும் செப்பனிட்டுக் காட்டப்படுகின்றன.

"வாழ்வின் மறுபக்கம்" என்ற அருளப்பு நிமால் கொன்ஸ்ரன்ரைன் நாடகப் பிரதி இன்றைய எமது வாழ்க்கைப்புலத்தின் நெருடும் மறு

### தமிழ் மணி

பக்கத்தை நோக்கிய தரிசனத்துக்கு அழைத்துச் செல்கின்றது.

பல்கலைக்கழகத்து மாணவர் சஞ்சிகைகள் இரு தளங்களிலே கால்பதித்து எழும் பொழுதுதான் கல்வி நிலையிலும், சமூகநிலையிலும் நேர்பரிமாணங்களை வளர்த்தெடுக்க முடியும். ஒன்று, அறிக்கை மேம்பாட்டுக்குரிய ஆய்வுகளை முன்னெடுத்தலும் உலகத்தரிச உரியமொழிபெயர்ப்புக்களைத் தருதலும் மற்றையது சமூக உணர்ச்சிக்கும், சமூக அர்ப்பணிப்புக்குமான படைப்பாக்க முயற்சிகளை முன்னெடுத்தல் மேற்கூறிய 2 நேர் பரிமாணங்களிலும் தடத்தைப் பதியவைத்த மலராசிரியர் நிர்மலாதேவி தங்கராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக புலமையாளர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். ★

# கலைஞர், எழுத்தாளர்கள் மனிதராக வாழவேண்டியது முதலாவது தேவை

## அநு. வையுடனான இலக்கியச் சந்திப்பில் வற்புறுத்து

ஒருவர் எழுத்தாளாராக, கலைஞராக ஆவதற்கு அவர் மனிதராக இருப்பது அவசியம் என்ற கருத்து கடந்த வாரம் நோயுற்ற பின் குணமாகி மீண்டும் எழுதத் தொடங்கியிருக்கும் அநு. வை. நாகராஜனுடனான இலக்கியச் சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது

எழுத்தாளர் நாகராஜன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கடும் நோயுற்று வலது கையினால் எழுத முடியாத அளவுக்குப் பாதிக்கப் பட்டுள்ளார்.

லப வருட சிகிச்சைகளின் பின்னர் அவர் இப்போது சுகமடைந்து இடது கையினால் எழுதப் பழகி மீண்டும் தமது எழுத்துப் பணியை ஆரம்பித்துள்ளார்.

அவர் கொழும்பிலிருந்து வந்த வேளையைப் பயன்படுத்தி யாழ். இலக்கிய வட்டம் கடந்த வாரம் ஓர் இலக்கியச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அவர் தமது நோயை மறந்து தாம் ஒரு நோயாளன் என்பதனை மறந்து புதிய மீட்சி பெற்ற மனிதராக, ஆன்மீகத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு புதுவாழ்வு வாழ்பவராகத் திகழ்கின்றார்.

கொக்குவில் குளப்பிட்டி "போட்டோ சிறி" இல்லத்தில் நடைபெற்றமேற்படி சந்திப்பின் போது அவர்தெம்பும் மலர்ச்சியும் நிறைந்திருக்கக் காணப்பட்டார்.

சந்திப்புக்கு செம்பியன் செல்வன் தலைமையேற்றுத் தொடக்கவுரை ஆற்றினார்.

எழுத்தாளர் அநு. வை. நாகராஜன் அவர்களது பன்முக ஆளுமையையும் அவர் இன்று உடல்நலம் குன்றிய நிலையிலும் ஊக்கமுடன் செயற்பட்டு நிற்கும் மாண்பையும் சுட்டிப் பாரர்ட்டிய அவர் இன்றைய ஈழத்துத் தமிழிலக்கியச் சூழலில் நிலவும் தேக்கநிலை படைப்பாளி - விமர்சகர் உறவுநிலை என்பன தொடர்பான சில அவதானிப்புக்களையும் முன்வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் நா. சுப்பிரமணியன் செம்பியன் செல்வனது கருத்துக்களை மேலும்விரித்து விளக்கும் வகையிலும், அதே வேளை அவர் எழுப்பிய பிரச்சினைகள் சிலவற்றுக்கு விடையளிக்கும் வகையிலும் சில சிந்தனைகளை முன்

### தொகுப்பு: சுவைஞன்

வைத்தார். அவரது உரையின் சில முக்கிய பகுதிகள்:

கலை, இலக்கியம் என்பவற்றின் அடிநிலை மனிதநேயமாகும். தன்னைச் சூழவுள்ள சமூக மாந்தரிடம் உண்மையான அன்பைச் செலுத்தும் ஒருவரே அதன் அடுத்த கட்டமாக கலைஞராகவும் எழுத்தாளராகவும் பரிணமிக்கின்றார். ஒருவர் தன்னைக் கலைஞராக, எழுத்தாளராக வெளிக்காட்டிக் கொள்வதற்கு முதற்கண் தன்னை மனிதராக— குடும்பத்தையும் சமூகத்தையும் நேசிக்கும் பண்பாளராக — ஆக்கிக் கொள்ள வேண்டும். எனவே கலைஞராக, எழுத்தாளராக இருப்பதைவிட மனிதராக இருப்பது முக்கியம். இவ்வாறான மனிதநேய மாண்பின் அடிப்படையில் தான் நாம் இன்று அநு வை. நாகராஜன் அவர்களுடன் இச்சந்திப்பை இங்கு நிகழ்த்துகிறோம்.

ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாகி, எழுத்தாளர், சமய சிந்தனையாளர், அறிவியல் ஆர்வலர், கலைவிமர்சகர் எனப் பலதள நிலைகளில் இயங்கி நின்ற அநு வை. நாகராஜன் அவர்கள் இவை அனைத்தினூடாகவும் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகச் செயற்பட்டவர்.

கடந்த சில ஆண்டுகளாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கும் போதும் மனஉறுதி தளராமல் சிந்திக்கவும் எழுதவும் முற்பட்டுவரும் அவர் எம் அனைவருக்கும் மிகுந்த மனநிறைவைத் தருகிறார். அவரது இந்த மனவுறுதி எமக்கும் ஓர் உந்துசக்தியாக அமைகிறது. அவர் மீண்டும் உடல்நலமுற வேண்டும்; இன்னும் பல்லாண்டு தம் எழுத்துப் பணியைத் தொடர வேண்டும். இவை எம் அனைவரின் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

எமது இலக்கிய வரலாற்றில் குறிப்பாகச் சிறுவர் இலக்கிய வரலாற்றில் அவரது காட்டில் ஒரு வாரம் என்ற நாவலுக்கு நிலையான இடம் உண்டு என்பதை இங்கு சுட்டுவது ஒரு விமர்சகன் என்ற வகையில் என் முக்கிய கடமையாகிறது. சமய-தத்துவத்துறை சார்ந்ததாக "பட்டரின் அபிராமி மான்மியம்" என்ற நூலொன்றை அநு. வை.நா. அவர்கள் உருவாக்கி வருகிறார் அந்நூல் அவருக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும் என்பது நம்பிக்கை.

இவ்வாறு தளரா மன அமைதியான இலக்கிய உல

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல சஞ்சலங்களையும் போக்கும் சக்தி வழிபாடு

## அவளை எண்ணத்தால், செயலால் துதிப்போம்

ஒரு பொருளின் வேலை செய்யக்கூடிய ஆற்றலுக்குச் சக்தி என்று பெயர். அதாவது ஒரு காரணம் தனக்குரிய சக்தியைக் கொண்டே காரியத்தைச் செய்கிறது. நெருப்பு தன்னிடத்திலுள்ள எரிக்கும் சக்தியினாலேயே பொருள்களை எரிக்கிறது. நெருப்பு — காரணமாகவும்; எரித்தல் காரியமாகவும் கொள்ளப்படும். இவ்வாறே நிலம், நீர், காற்று, ஆகாயம் ஆகியவையும் தத்தமது சக்திகளினால் காரியங்களைச் செய்கின்றன. அதன் மூலம் உலக இயக்கம் தயக்கமின்றி நடைபெறுகிறது எனலாம்.

உலகத்திலுள்ள பொருள்கள் தாம் காரணமாயிருந்து பல காரியங்களைச் செய்வதற்கு அவற்றிடையே ஆக்கும் சக்தி ஒன்று இருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் அல்லது அண்டசராசரங்களை உண்டாக்கியும் அதிலேபலகாரியங்களைச் செயற்படுத்தியும் வருவதற்குக் காரணமாய் இருப்பவர் இறைவன் என நாம் ஏற்றுக் கொண்டால் அவரிடம் ஆக்கும் சக்தி அல்லது காரியசக்தி ஒன்று இருக்க வேண்டும். இந்தச் சக்தியின் உதவியுடனேயே படைப்பும் பயன்பாடும் நிகழ்கின்றது; மறைப்பும் இறப்பும் நடக்கிறது. இந்தச் சக்தி இன்றிக் கடவுளால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே தான் சக்தியை முக்கியமாகக் கருதி அதற்கெனத்தனித்துவமான வழிபாட்டு முறைகள் தோன்றுவதாயிற்று. அதுவும் அந்த சக்தியைப் பெண் வடிவாகக் கருதி நன்மை பெற விழைந்தனர் நம்முன்னோர்.

''அருளது சக்தியாகும் அரன்
தனக் கருளே யன்றித்
தெருள் சிவமில்லை அந்தச்
சிவமின்றிச் சக்தி இல்லை''

என்றும்

''எத்திறம்நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பாள்''

என்றும் தாய் வடிவில் சக்தியை வழிபட்டுத் தனமும் கல்வியும், ...ளர் வறியா மனமும் தெய்வவடிவும் பெற்று உலகிற்கு நலம் தரும் வகையில் நல்வாழ்வு வாழ்ந்தனர் நம்முன்னோர்.

அவ்வகையில் மனிதனிடத்திலுள்ள உயிராற்றற் சக்திகளான சத்தியம், தர்மம், சாந்தி அன்பு, அகிம்சை என்பவற்றின் தளத்தில் நின்று வளர்ந்துவரும் மாணவ சமுதாயத்தை விழிப்படையச்

**நா.க.சண்முகநாதபிள்ளை**

செய்து ஒளிபடைத்தவர்களாக உறுதி கொண்டவர்களாக, களி படைத்தவர்களாக வரச் செய்தல் வேண்டும்

நவராத்திரி நாள்களில் சக்திபூசை எங்கும் கொண்டாடப்படுகிறது. ஆலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், தொழில் நிறுவனங்கள் எனப் பல இடங்களிலும் பக்தி பூர்வமாகச் சித்திகளைப் பெறுவதற்கென சிரத்தையோடு விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நாம்பட்ட அவலங்களை நாம் மனங்கொள்ளுதல் இந் நாள்களிலே பொருத்தமுடையதாக இருக்கும். தேடிய மாடு நீடு செல்வமும் ஆடித் திரிந்து நாம் கற்றதும் கேட்டதும் உண்டுண்டுறங்கி தேக பலத்தை வளர்த்துத் தெருவுச் சண்டைகளை கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் கண்டது மட்டுமன்றி என்ன லாபம் கண்டோம். இந்த மண்ணிலே கற்றுப் பட்டம் பெற்ற பேரறிவாளர் பலர் மனித நேயத்துடன் இங்கு பணியாற்றவில்லை. இங்கு பெற்ற செல்வங்கள் வந்தவாறே அழிந்து விட்டன. எங்களுடைய வலு விழலுக்கிறைபபதிலேயே செலவாகின்றது. மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசித் திறமான புலமைகளைத் தேயவிட்டுள்ளோம். அகப்புறக் காரணங்களைக் காட்டி இவற்றிலிருந்து விடுபடவும் முனைகின்றோம்.

எல்லாத் தீய எண்ணங்களும் மனித மனத்திலேயே தோற்றுவாய்களைப் பெற்றுச் செயலூக்கம் பெறுகின்றன. எனவே அதேமனிதமனத்தில்தான் இவற்றை அடையாளங்கண்டு ஒதுக்கி நல்வழிச் செல்வதற்கான கல்வி வித்து ஊன்றப்பட வேண்டும்.

இன்று வாழும் தலைமுறையினரான நாம் எமது வாரிசுகளுக்கு ஒரு பொல்லாப்புமில்லாத உலக வாழ்வை அமைத்துக் கொடுத்துவிட்டுச் செல்லவேண்டுமென்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை. இதற்கு இன்று பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு சமாதானமாக வாழ்வதற்கான மனோ நிலையைக் கல்விமூலம் ஏற்படுத்த வேண்டும். படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறியவர்கள் மனித மேம்பாட்டு அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். உணர்ச்சி நிலையிலும் பேரறிவின் பேற்றிலும் ஆன்ம தரிசனத்திலும் சொல்லாலும் செயலாலும் எண்ணத்தாலும் சுத்தமுள்ள சக்தி நெறியைப் பக்திநெறியாக மாற்றினாலும் அந்தச் சக்தியே சங்கடங்களில் இருந்து விடுபட வைக்கும் சக்தியைக் கருவியாகவும் உரிமையாகவும் உடைமையாகவும் ஆக்கி, அந்தப் பேரருட் சக்திக்கு அடிமையாகி எமைப் பணி கொள்ளுமாறு கேட்டால் இன்பமே சூழவும் எல்லோரும் வாழவும் அன்பினால் அகிலத்தில் அமைதியைக் காணலாம் இந்த வகையிலே சக்தி தரிசனத்தை நிதர்சனமாக்குவோமாக!

''சக்தி தனக்கே
உரிமையாக்கு - அது
சக்தியென்று தாளமிட்டு
முழங்கும் - சித்தம்
சக்தி தனக்கே
உரிமையாக்கு - அது
சஞ்சலங்கள் யாவினையும்
அழிக்கும்''

— பாரதி

## ஆச்சிரமக் கல்வியின் அவசியம்

இராமலக்குமணர்களைத் தசரதனுடைய புதல்வர்களென்று உலகங் கொண்டாடுகிறது. உண்மையாக நோக்குமிடத்து, அந்தத் தசரதன் பெயரளவிலேதான் இவர்களுக்குத் தந்தை. தந்தையாயுங் குருவாயுந் தெய்வமாயும் இருந்தவர் தலசிரேஷ்டராகிய வசிஷ்ட முனிவரே. வசிஷ்டருடைய ஆச்சிரமத்திலேதான் இவர்கள் வளர்ந்தவர்கள். இவர்களுக்கு உபநயனச் சடங்கும் ஆச்சிரமத்திலேதான் நடந்திருக்கிறது. வேதாத்தியயனமும் வசிஷ்டரிடத்திலேதான் இவர்கள் பயின்றார்கள். வில்வித்தை முதலிய சமஸ்த வேதவித்தைகளும் அங்கேதான் இவர்களுக்குப் பூரணம் எய்தியது உலக சர்வகலாசாலைக் கல்விகளெல்லாஞ் சென்று முற்றுப் புள்ளி எய்தும் இடம் வசிஷ்டருடைய ஆச்சிரமம்.

இராமனாதியர்கள் நகராங் கடந்து, நாடு கடந்து கரடு முரடான காட்டுக்குட் பிரவேசிக்கின்றார்கள். அங்கே கட்டடம் இல்லை. கதவுகள் இல்லை. நவீன உபகரணங்கள் அத்தனையும் இல்லை. மரங்கள், கொடிகள், செடிகள் ஆகிய இயற்கைகளே அன்றிச் செயற்கைகள் எவையும் இல்லை. அங்கும் இங்கும் அடர்ந்து படர்ந்த மரநிழல்களிலே புலித்தோலாசனங்களில் முனிவர்கள் நிமிர்ந்து நிட்டை கூடுகின்றார்கள். அவர்கள் முன்னிலையில் நெய்யோடு கூடிய ஓமாக்கினி நாவை நீட்டுகின்றது. இராமன் போன்றவர்கள், பாலகிருஷ்ணர்கள் கைகளிலே சமித்துக்களை ஏந்தி நின்று பணி விடை செய்கின்றார்கள். இடையிடையே பாடம் நடக்கின்றது. இரு என இருந்து, ஏடு அவிழ் என அவிழ்த்துப் பாடம் நடந்த பிறகு பாலர்கள் தத்தம் வீடு திரும்புகின்றார்கள். அவர்கள் படித்த பாடங்களுக்கு ஒரு பரீக்ஷை போல, பாலர்கள் வரும் வழியில் அந்தப் பாலர்களை எதிர்ப்படுபவர்களின் முகங்கள் ஒளிவிடுகின்றன.

பண்டிதமணி சி. க,
(கம்பராமாயணக் காட்சிகள்)

## எதிரொலி..

- இடியன்

● ஏவுகணைகளை இடையிலே தடுத்து நிறுத்தி அவற்றை முற்றாக அழிக்கும் புதிய ஆயுதமொன்றை அமெரிக்கா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது

★ **சமாதானம், சனநாயகம், சமபலம் என எவ்வளவு தான்வாய்ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தாலும், ''தடி எடுத்தவன் தண்டல்காரன்'' என்ற தத்துவத்தைத்தான் அமெரிக்கா உண்மையிலேயே நம்புகின்றது, என்பதே இதன் அர்த்தம்.**

● தமிழ் நாட்டிலே காங்கிரஸ் தோற்றதற்கு அக்கட்சியே முழுக்க முழுக்கக் காரணம் என்கின்றார் ஜெயலலிதா!

★ **உண்மைதான்! அ. இ. அ. தி. மு. க வுடன் கூட்டுச் சேரும் தவறைக் காங்கிரஸ் செய்யாதிருந்திருந்தால், அது கணிசமான வெற்றியை ஈட்டியிருக்கக் கூடும்!**

● அம்பாறையில் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்காகத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்!

★ **எல்லையில் [லா] ஆயுதங்கள் வழங்கப்படுமோ?**

● இரத்தம் சிந்தாப் புரட்சி ஒன்று பாகிஸ்தானில் நடைபெற்றுள்ளது.

★ **''நவாஸ் ஷெரீப்பின் அரசு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையப்பா'' எனச் சொல்லி, அதிகாரத்தைத் தன் கையில் இப்போது வைத்திருப்பது 'அந் நாட்டின் படையப்பா!**

● இலங்கை இராணுவத்துக்கு நவீன வசதிகள் செய்து கொடுக்கபபடுமாம்!

★ **அவற்றைப் பயன்படுத்தி நவீன சதிகளை இராணுவம் செய்யாது என நம்புவோமாக!**

● இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாகவெளிநாடுகள் தலையிடுவது ஐ நா. கொள்கைக்கு முரணானது என்கின்றார் கதிர்காமர்!

★ **அப்பாவி மக்களைப் பட்டினி போடுவதும், திடீர் திடீர் எனக் கைது செய்து காவலில் வைத்துச் சித்திரவதை செய்வதும், சண்டை நடக்காத இடங்களில் குண்டுத் தாக்குதல் நடத்துவதும் ஐ. நா. கொள்கைக்கு முரணானவையல்ல என அவர் கருதுகின்றாரோ?**

● ஜோர்ஜ் பெர்னாண்டஸிடமிருந்து, பாதுகாப்பு அமைச்சைப் பறித்தெடுக்க மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை!

★ **பாதுகாப்பு அமைச்சு அவரிடமே பாதுகாப்பாகத் திரும்பி வந்துவிட்டது!**

● காவிரி நீர் சம்பந்தமாகத் தன் நண்பரும் கர்நாடகத்தின் புதிய முதலமைச்சருமான கிருஷ்ணா அவர்களைத் தமிழக முதல்வர் சந்திக்கவுள்ளாராம்!

★ **காவிரி பற்றி அவர் கைவிரிக்காதிருக்க அந்த நட்பு உதவுமோ?**

# சவால்களுக்கு முகம் கொடுத்து

## இலட்சிய பயணத்தை தொடர்வோம்

கிறிஸ்தவன் என்பவன்கிறிஸ்துவின் சீடன் அபோஸ்தலன் கிறிஸ்தவ மதிப்பீடுகளின் படி வளர்ந்து உலகிற்கு ஒளியாகத் திகழ்பவன். வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர்ந்து இறையரசைக் கட்டியெழுப்புபவன். கிறிஸ்து இன்னும் அறியப்படவும் இன்னும் அன்பு செய்யப்படவும் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பவன்.

### ஞாயிறு நற்பிரசாதகம்

விசுவாசத்தைப் பரப்புகின்ற கடமை கிறிஸ்துவினுடைய சீடன் ஒவ்வொருவனின் மீதும் அவன் சக்திக்கேற்ப சுமத்தப்பட்டுள்ளது. எனவே எல்லோரும் மறைபரப்பாளர்களாக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துதான் மனித உள்ளங்களில் மறையறிவிப்பிற்கான அழைத்தலைத் தூண்டுகின்றவர். திருமுழுக்கின் ஊடாக அவர் எம்முடன் பகிர்ந்துகொண்ட இறைவாழ்வை நாமும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று எம்மைத் தூண்டிக் கொண்டிருக்கின்றனர்.

வருடாவருடம் வரும் மறைபரப்பு ஞாயிறு கிறிஸ்தவன் ஒவ்வொருவனதும் பகிர்ந்து வாழ்தலை, கிறிஸ்துவை அறிவித்து வாழ்தலைத்தான் அறிவுறுத்தி நிற்கின்றது. தந்தையாகிய இறைவன் தன் ஒரே மகன் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு ஆண்டவரும் இரட்சகருமாக அனுப்பியது போலத் தன் மறையுடலாம் திருச்சபையைத் தனக்குப் பின் பதிலாகப் பணியாற்ற இவ்வுலகிற்குக் கிறிஸ்து அனுப்பியது போல இன்று நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினால் அனுப்பப்படுகின்றோம்.

இந்த அழைப்புத் தனித்துவமானது; இறைவனிடமிருந்து வருவது; பரிசுத்த ஆவியின் பெருங்கொடை; எமது நிலை, வாழ்வில் எவ்வகையாயினும் எம் எல்லோரையும் சாருகின்றது. மறைபரப்பாளனாக வாழவேண்டிய கடமையை நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

மூன்றாவது சகாப்தத்தில் காலடி எடுத்து வைக்க நாம் ஆயத்தமாயிருக்கிறோம். இக் காலகட்டத்தில் உலகம் எமது மறைபரப்புப் பணிக்கு ஆதரவாக இருக்கப்போவதில்லை. மாறாகக் கிறிஸ்துவை அறிவிக்கும் பணிக்குத் தவறான அர்த்தம் காட்டி வெறுப்பையும், எதிர்ப்பையும் தேடித் தரப்போகிறது. நாம் வாழும் இத் தீவிலும், எம் அண்டை நாடான இந்தியாவிலும் கிறிஸ்தவத்திற்கும் அதன் பணியாளருக்கும் எதிராக இடம்பெறும் நேரடியான, மறைமுகமான செயற்பாடுகளில் இருந்து இதுதெளிவாகிறது. ஆனால் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களோ எதற்கும் அஞ்சா நெஞ்சத்தினராய், பார்வையில் தெளிவும், உள்ளத்தில் உறுதியும் கொண்டவராய்ச் செயற்படுகின்றனர்.

கிறிஸ்தவத்தின் சவால்களுக்கு எமது பதில் என்ன? இன்னல்கள், நெருக்கடிகளைக் கண்டு அடங்கி ஒடுங்கிட விழைகின்றோமா? அல்லது இறைவன் குரல் கேட்டு ''தந்தையே! இதோ அடியேன்; என்னை அனுப்பும்'' என்று பதில்கூற விழைகின்றோமா?

**அருட்திரு. றெஜி இராஜேஸ்வரன்**

நன்றி:
பாதுகாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட
உதவிப் பணிப்பாளரும் வலிகாமம் கல்வி வலயத்தின்
பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய

**ஆ. கமலநாதன்**

அவர்களது மறைவுச் செய்தி கேட்டுக் கலங்கி நிற்கும் அதேவேளை அவரது பாதங்களுக்குக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்.

யா/ யூனியன் கல்லூரி,
யா/ பொன் பரமானந்தர் ம. வி.
தெல்லிப்பழை. [70008]



## கண்ணீர் அஞ்சலி

**ஆ. கமலநாதன்**

(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

அன்னாரின் பிரிவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் அர்ப்பணிக்கின்றோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர், ஆசிரியர்கள், அலுவலர், சிற்றூழியர்.
கோட்டக் கல்வி அலுவலகம்
உடுவில்.

[70025]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03 - 06 - 1966

அழைப்பு
17 - 10 - 1998

திருமதி
**புஸ்பரஞ்சினி ஆனந்தபாஸ்கரன்**
(ஆசிரியை, பரி. பேதுரு பாலர் பாடசாலை, கில்னர் மண்டபம்)

நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஓராண்டு
போனாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் அகலாது!

கணவன், பிள்ளைகள், உறவினர்.

242/4, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [70029]



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 — 06 — 1923



மறைவு
19 — 10 — 1994

அமரர்
**கோ. ஏகாம்பரநாதக்குருக்கள் சோமசுந்தரஐயர்**
(ஓய்வுபெற்ற ஆசிரிய பண்டிதர்)
திதி: அட்டமி 17-10-1999

எண்ணமதில் நீங்காத எமதருமை ஐயாவே!
எங்களை விட்டேகி வருடம் ஐந்தானதே
உத்தமரே உம் நினைவால் அனுதினமும் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவன் கோயிலடி, சித்தன்கேணி. [70026]


## சாரணர் அணிகளுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், ஒக். 17

கிளிநொச்சி சாரணர் மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டு சாரணர் வேலை வாரத்திற்கான விருதுகள் ஐந்து அணிகளிற்கு வழங்கப்பட்டன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய குருளையரில் 3 அணிகளும், சாரணரில் ஓர் அணியும், பளை மகாவித்தியாலய சாரணரில் ஓர் அணியும் இந்த விருதுகளைப் பெற்றுக்கொண்டன.

37 சாரணர் மாவட்டங்களைக் கொண்ட இலங்கையில் 9 மாவட்ட அணிகளிற்கு மட்டுமே இந்த விருதுகள் கிடைத்துள்ளன. அதிலும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்ட அணிகள் மட்டுமே இந்த விருதுகளைப் பெற்றுள்ளன.

இந்த விருதுகள் சாரணர் தலைமைக் காரியாலயத்தில் பிரதம சாரணர் ஆணையாளரினால் வழங்கப்பட்டன.

(ஐ-4)

## கலைஞர் எழுத்தாளர்..

[ஆறாம் பக்கத் தொடர்]

கில் மீளவும் செயற்பட்டு நிற்கும் அநு.வை நா. அவர்களைப் பாராட்டும் இச் சந்தர்ப்பத்தில் இங்கு தலைமை வகிக்கும் செம்பியன் செல்வன் அவர்கள் தொடர்பாக ஓர் அம்சத்தைக் கவனத்திற் கொளர விழைகின்றேன். அறுபது எழுபதுகளில் இலக்கிய உலகில் ஓர் இயக்க சக்தியாகத் திகழ்ந்தவர் செம்பியன். அவரது எழுத்துக்கள் பலருக்கு ஊக்கம் அளித்துள்ளன. இவ்வகையில் ஊக்கம் பெற்றவர்கள் ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் உள்ளனர். தமிழகத்தின் பிரபல படைப்பாளிகளில் ஒருவரான சி. ஆர். ரவிந்திரன் அவர்கள் செம்பியன் செல்வனின் யாழ். இலக்கிய வட்ட வெளியீடான அமைதியின் இறகுகள் கதைத் தொகுதியிலுள்ள கதைகளால் கவரப்பட்டவர். அக்கதைகளில் ஜெயகாந்தனும் லா. ச. ராமாமிருதமும் இணைந்த ஒரு படைப்பாற்றலைத் தரிசித்தவர். அவற்றை வாசித்த ஊக்கத்தில் எழுதுவதில் பிரவேசித்தவர் இதனை அவர் 12-9-99 தினமணி கதிர் இதழில் ''முதல் பிரசவம்'' என்னும் பகுதியில் எழுதியுள்ளார். அவர் தந்துள்ள இச்செய்தி செம்பியன் செல்வனுக்கு மட்டுமல்ல யாழ். இலக்கிய வட்டத்திற்கும் பொதுவாக ஈழத்தவரான எம் அனைவருக்கும் மிக்க மனநிறைவைத் தருவதொன்றாகும்.

எனவே இன்றைய இந்த இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியானது அநு. வை. நாகராஜன் அவர்களின் இலக்கிய மீட்சியின் ஒரு கட்டமாக அமைவதோடு மட்டுமன்றிச் செம்பியன் செல்வன் அவர்கள் தம் ஒழுங்கு நிலையினின்று மீள்வதற்கான பழைய செயலூக்கத்துடன் மீண்டும் புத்தெழுச்சி பெறுவதற்கான ஒரு திருப்புமுனையாகவும் அமையட்டும் — என்று சொன்னார்.

பேராசிரியரின் உரையைத் தொடர்ந்து க. கணேசலிங்கம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை கவிஞர் கல்வயல் குமாரசாமி ஆகியோர் அநு. வை. நாகராஜனின் பண்பு, பணிகள் என்பன பற்றியும் சமகால இலக்கியச் சூழல் பற்றியும் பல நிலைகளில் கருத்துக்களை முன்வைத்தனர்

பதிலுரையாற்றிய அநு.வை. நாகராஜன், கலந்துகொண்ட அனைவருக்கும் தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

★

# ☺ மக்கள் முகம் ☺

''கெல்பேஜ் சிறீலங்கா'' நிறுவனத்தினால் முதியோர் தினத்தையொட்டி இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தமிழ் மொழி மூலமான கட்டுரைப் போட்டியின் மேற்பிரிவில் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி எஸ். தையல்நாயகி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தலைமையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவுக்கு மாணவி அழைக்கப்பட்டுள்ளார். [க]

★ ★ ★



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் தொழில்நுட்பவியலாளரும் சமூக சேவையாளருமான எம். பி. சண்முகநாதன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக 29 – 09 – 1999இல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இவர் சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலயத்தில் இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியராகவும் கைதடி பகவான் ஸ்ரீசத்திய சாயி பஜனை நிலைய பால விகாஷ் குருவாகவும் கடமையாற்றி வருகின்றார்.

[ஐ-5]

★ ★ ★



நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்தவரும் ஓய்வு பெற்ற அதிபரும் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான நாகமுத்து சங்கரப்பிள்ளை அவர்கள் 8—10—1999 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் செயலாளரும், நெடுந்தீவு பிரசைகள் குழுச் செயலாளரும் நெடுந்தீவு இணக்கசபை உறுப்பினரும் நெடுந்தீவு பனை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரும் நெடுந்தீவு கலை கலாசாரப் பேரவையின் பொருளாளரும் அமரர் கே வி.எஸ். திருநாவுக்கரசு ஆசிரியர் புலமைப் பரிசில் நிதியத்தின் பொருளாளருமாவார். சமய-சமூக சேவையாளரான இவர் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

(ஐ—7)

★ ★ ★



பிரபல சமூகசேவையாளரும் யாழ்ப்பாணம் பிரகாஷ் நகை மாளிகை உரிமையாளருமாகிய ஞா. சிதம்பரநாதன் பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தொல்புரத்தைச் சேர்ந்த இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினரும், தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பொருளாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

(ம-28)

★ ★ ★ ★ ★



யாழ்ப்பாணம், ஒக். 17

சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டையைப்பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராசா கடந்த 27 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் கோட்டையம்பதி சிவ சுப்பிரமணிய தேவஸ்தான செயலாளராகவும் ஆங்கில அறநெறிப்பாடசாலை ஆசிரியராகவும் கடமையாற்றியவர். இவர் சமூகசேவைகளில் மிகுந்த ஈடுபாடுடையவர்.

(ம)

★ ★ ★ ★ ★

திருநெல்வேலி, ஒக் 17

கொக்குவில் மேற்கைச் சேர்ந்தவரும் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் மருந்துக் கலவையாளருமான இ. தவராஜலிங்கம் சமாதான நீதிவானாக அண்மையில் நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவரும், கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க போஷகரும், கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளை செயலாளரும், அகில இலங்கை மருந்துக் கலவையாளர் சங்க யாழ். மாவட்ட பிரதிநிதியும், நல்லூர் ப. நோ கூ. சங்க பொதுச்சபை உறுப்பினருமான இவர் சமூக, சமய தொண்டருமாவார். [ஐ-135]

★ ★ ★

தென்மராட்சி, ஒக். 17

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதம எழுதுநராகக் கடமையாற்றும் நுணாவிலைச் சேர்ந்த க. இராமச்சந்திரன் சமாதான நீதிவானாக நீதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். செயலக ஓய்வூதியக் கிளையில் நீண்ட காலமாகக் கடமையாற்றிய இவர் மாவட்டச் செயலகங்களின் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டபோது தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பான்சோ (Bandso) ஆஸ்திரேலிய தயாரிப்பு மோட்டரும் மற்றும் 3 பேஸ் நியூமன் English 25 HP மோட்டரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல, 67, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். (69993)

45 நாள் நிரம்பிய அல்சேசன், ஜேர்மன் சபேட் இன அழகிய நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல: 42, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [70013]

அல்சேசன் கலப்பின நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. ஜெயராசசிங்கம் (பவா) உடுவில் மேற்கு, சுன்னாகம். (70014)

யாழ்ப்பாணம், மருதடி வீதியில் 1 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜேம்ஸ் மரியம்மா 2/2, மருதடி லேன், யாழ்ப்பாணம். (69989)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர்மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1Kg 120/- தொடர்பு: இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (69634)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இலக்கம். 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (70005)

புறொயிலர் இறைச்சி ரூபா 55 விருந்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். இல. 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம் அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி, (முலவைச் சந்தி வேளாங்கண்ணி கடை அருகில்) யாழ்ப்பாணம். (70007)

Broiler இறைச்சிக் கோழி தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். அடை முட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (69891)

## மணமகள் தேவை

இந்து வேளாளகுல 27 வயது நிரம்பிய மகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். செவ்வாய்க்குற்றம் அற்ற சாதகர் கிரகபாவம் 24, உயரம் 5 அடி 2 அங்குலம் தொழில் வியாபாரம் சொந்தத்தில் விவசாயம் சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. வலி. கிழக்குப் பகுதியில் மணமகள் விரும்பப்படுகிறது. விலாசமிட்ட சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 957, மே/பா. உதயன். (70022)

# வைத்திய அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 17

பண்டத்தரிப்பு வைத்திய சாலைக்கு நிரந்தரடாக்டர் ஒருவர் சுகாதாரத் திணைக்களத்தினால் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

உதவி வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி கலாதேவி சிவகுமாரே இந்த வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-5)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் பழைய தூய பிரயோக கணிதம் பயிற்சி பெற்று பல வருடங்களாகக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: மாலை 3 மணிக்குப்பின் R. பாலசுப்பிரமணியம் B.Sc (Cey) Dip. in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (70018)

## விநாயகர் சோதிடம்

சாதகம் பலனறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, சாதகம் எழுத விவாக தாமதத்திற்கும், கிரகதோஷத்திற்கும் தகுந்த பரிகாரம், கால சர்ப்ப தோஷ நிவர்த்தி, பிரயாணத் தடை இதற்கு யந்திரம் ஆகியவற்றிற்கு சந்தியுங்கள். கொழும்பில் 22 வருடம் அனுபவம் வாய்ந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ மா. தங்கவேல் சோதிடர் 9, டச்சு வீதி, சாவகச்சேரி. [70016]

## Maths, English "99"

துரிதமாக 6, 7, 8, 9, 10, O/L Distinction, Credit பெறுபேறுகள் அடைய ஆரம்பத்திலிருந்து 1000 வினாக்கள் அடங்கிய Paper Class வரை கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி சிவன் கோயில் பின் வீதி, திருநெல்வேலி. (69991)

## ஜோதிடம்

சுபீட்சமான வாழ்வுபெற உங்கள் குழந்தைகளின் குறிப்புக்களைப் பெயர் அதிர்ஷ்டத்துடன் இங்கே எழுதவும். இல. 304, ஆலடிச்சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (69957)

## தவறிவிட்டது

கலட்டி பண்டத்தரிப்பைச் சேர்ந்த பாலசிங்கம் புஷ்பராணி என்பவரது தேசிய அ. அட்டை (இல-186710373 V) யும் விஷேட அ. அட்டை (0904019285)யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (69988)

கோப்பாய் மத்தி கோப்பாயைச் சேர்ந்த தியாகராசா நவதீபன் என்பவரது தேசிய அ. அட்டையும், விஷேட அடையாள அட்டையும் 10-10-99 ஞாயிற்றுக்கிழமை அன்று இராச வீதிச் சந்திக்கும் சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்குக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வினோ நகைப் பூங்கா, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (69998)

த. ஸ்ரீவிமலேஸ்வரன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகளும், சாரதி அனுமதிப் பத்திரமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். V. K. இராசரெத்தினம், 95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. T.P 2056. (70024)

## தேவை

வயது முதிர்ந்ததாயாரைப் பராமரிக்கவும் வீட்டுப் பணிக்கும் பெண் வேலையாள் தேவை. தொடர்பு இல. 67 செட்டித்தெரு, நல்லூர். (69992)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (69905)

# மணிவிழா நாயகரை வாழ்த்துகின்றோம்

வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவரும் சபையின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருபவருமான வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்

சங்கீதபூஷணம்

**சு. கணபதிப்பிள்ளை**

அவர்கள் அறுபதாம் அகவையைப் பூர்த்தி எய்தி மணிவிழாக் காணுவதனையிட்டு மனமார வாழ்துகின்றோம்.

வட இலங்கைச் சங்கீத சபையினர்,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி/9373)

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் 14-10-99 இல் சமாதானநீதிவானாக

**திரு நாகராசா செல்வராசா**

(வர்த்தக முகாமையாளர் மானிப்பாய் ப.நோ. கூ. சங்கம்)

அவர்கள்

சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு நடைபெறும்

# வரவேற்பு விழா

தலைவர்: திரு. க. நாகமணி அவர்கள் S L E. A. S.
(ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர், தற்போதைய உடற்பயிற்சி விரிவுரையாளர் -யாழ். பல்கலைக்கழகம்)

இடம்: சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலைமண்டபம்

காலம்: 17-10-99 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3-00 மணி (புதிய நேரம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

ஆலங்குளாய் சனசமூக நிலையம்,
சண்டிலிப்பாய் வடக்கு
கிராம முன்னேற்றச் சங்கம்.

(70009)

# கேதார கௌரி விரதம்

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் 19 - 10 - 99 செவ்வாய்க்கிழமை விஜய தசமியன்று காலை 10 00 மணிக்கு கேதார கௌரி நோன்பு பூசை ஆரம்பமாகும்.

விரதகாரர்கள் 21 தினமும் வந்து கேதார ஈசனை வழிபட்டு நோன்புக்காப்பை அணிந்து ஈசனின் அருளைப் பெறுவீர்களாக!

சுபம்!

(70019) சீ. பரமேஸ்வரன்

# நன்றி கூறுகின்றோம்

14 - 10 - 99 அன்று என்னால் தவற விடப்பட்ட எனது பவுண் கைச்சங்கிலியை அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்கத்தைச் சேர்ந்த சாரதி இராசதுரை இராசேந்திரம், நடத்துநர் இராசையா பாவேஸ்வரன் ஆகிய இருவரும் (மினிபஸ் இல. 29 - T 285) என்னிடம் ஒப்படைத்ததற்காக அவர்களுக்கும் அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்கத்துக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மு. நாகராசா
ராஜா மிக்சர் அகம்
கட்டப்பிராய். [சி/9382]

# ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

எமது கல்லூரியின் புகழ்பூத்த மாணவனும்
எமது கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய

**ஆ. கமலநாதன்**

[உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்]

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
[70011] கந்தரோடை, சுன்னாகம்.

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் தெல்லிப்பழைக் கோட்ட கல்வி அதிகாரியும்
இன்னாள் வலிகாமம் வலய
உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய

**ஆ. கமலநாதன்**

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

கல்விச் சமூகம்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை. (70004)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 — 09 — 1922

மறைவு 17 — 09 — 1999

## திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி

கடந்த 17—09—99 இல் சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவியின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் நல்கியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவிப்பதுடன், இன்று 17—10—99இல் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்.

எஸ். கே. சற்குணம் [மகன்]
''தண்மதி'',
பிள்ளையார் கோயில் வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

(70023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி வரவேற்கின்றோம்



**திரு. சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி**

[தர்மகர்த்தா
வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்]
சமூகசேவையாளர்

திரு. சு. முத்துக்குமாரசாமி
அவர்கள் சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றதை யிட்டு அவரது சேவை மேன்மேலும் வளரவேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி சி. தியாசராசா
உரிமையாளர்
சங்கு சக்கரம் இரும்பகம்
113, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(69987)

## இரு இளைஞர் கைது

யாழ். நகரில் இடம்பெற்ற சைக்கிள்திருட்டுச்சம்பவங்கள் தொடர்பாக இரு இளைஞர்கள் யாழ். பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி தணிகைக்குமாரன், தம்பிராசா யோகேந்திரன் ஆகியோரே பொலீஸாரினால் கைது செய்யபட்டுள்ளவர்களாவர். (3–5)

## காப்புறுதிக் கிளை ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் கிளையொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இக்கிளையினை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக யாழ். கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (3–5-9)

## மருந்து அனுப்பி வைப்பு

நான்காம் கந்தாயத்துக்குரிய மருந்துப் பொருள்கள் சுகாதாரத் திணைக்களத்தினால் குடாநாட்டிலுள்ள சகல அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (3–5)

நாரந்தனை வடக்கு, பண்டாரபுலம்
தான்தோன்றி

## ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்
## பூசகர் தேவை

மேற்படி ஆலயத்தில் இருந்து மூன்று காலப் பூசைகள் நடத்த சிறந்த நல்லொழுக்கம் உள்ள ஆலயப் பூசகர் தேவை. இத்துடன் வேறு இரண்டு சிறிய கோயில்களில் பூசை செய்வதற்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். வதிவிட ஒழுங்கு ஆலயச் சுற்றாடலில் செய்து கொடுக்கப்படும். விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நியாயமான சம்பளமும் வழங்கப் படும். மற்றும் கிராமத்தில் நடைபெறும் சடங்குகள், சமய நிகழ்வுகள் யாவற்றிலும் பிரத்தியேகமாகக் கலந்து கொள்ளலாம்.

– பரிபாலன சபையினர்

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நாரந்தனை வடக்கு. (70010)

## சாரங்கன் தொலைத்தொடர்பு சேவை
## Sarangan Telecom Service

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவைக்கு
சாரங்கன் தொலைத் தொடர்பு சேவை
(நடராஜ ராமலிங்க வித்தியாலயம் அருகில்)
ஆவரங்கால், புத்தூர்.
உள்நாடு – 070 - 21 - 2527
வெளிநாடு – 00947 021 - 2527

(69997)

## வலிகாமம் கிழக்கு
## பிரதேச செயலக கலாசாரப் பேரவை

நடத்தும்

# முத்தமிழ் விழா - 1999

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி (17 - 10 - 99 ஞாயிறு)**

**நேரம்: பிற்பகல் 1. 30 மணிமுதல் 7. 00 மணிவரை**

**இடம்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர்கூடம்**

1. 30 மணி — மங்களவிளக்கேற்றல்
1. 35 மணி — தேவாரம்: கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மாணவர்கள்
1. 40 மணி — தமிழ்த்தாய் வாழ்த்து: அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்கள்
1. 45 மணி — மங்கள இசை: இ. யோகநாதன், ந பாலசுப்பிரமணியம் குழுவினர் இருபாலை
2. 30 மணி — வரவேற்புரை: கே. ஜே. ஜோசெப் இரட்ணராஜா கிராம அலுவலர், கோப்பாய் மத்தி
2. 35 மணி — தலைமையுரை: திரு. க. கேதீஸ்வரன் பிரதேச செயலர், கோப்பாய்
2. 45 மணி — பிரதம விருந்தினர் உரை: திரு. க. சண்முகநாதன் அரசாங்க அதிபர் செயலகம், யாழ். மாவட்டம்
3 00 மணி — சிறப்புவிருந்தினர்கள்: திரு து. வைத்திலிங்கம் மேலதிக அரச அதிபர், செயலகம், யாழ். மாவட்டம்
திருமதி சு. முரளீதரன் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.
வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசா, கோப்பாய்.
திரு. அ. த. க. கிருஷ்ணராசா தலைவர், ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.
திரு எஸ். சிவகடாட்சம் அதிபர், கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய்.
3. 10 மணி — நடனம்: பூபாலசிங்கம் விஷ்ணுகுமாரி குழுவினர், அச்சுவேலி
3. 25 மணி — கரகம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள்.
3. 40 மணி — செம்பு நடனம்: கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மாணவர்கள்.
3. 50 மணி — **கவியரங்கம்** "புத்தாயிரமாம் ஆண்டுகளுக்கு ஒரு பூபாளம்" கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.
4. 35 மணி — சிறப்புச் சொற்பொழிவு: செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் 'தமிழ்இலக்கியங்களில் அறம்'
4 55 மணி — நாட்டிய நாடகம்: பக்தபிரகலாதன் அச்சுவேலி மகாவித்தியாலய மாணவர்களும் ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய மாணவர்களும்.
5. 40 மணி — வயலின், சோலோ: திரு த. சற்குணநாதன் குழுவினர்.
6. 25 மணி — இசைக் கச்சேரி:
பாட்டு: 'கலாபூஷணம்' திரு. வ செல்லத்துரை
வயலின்: இசைக்கலைமணி திரு எஸ் திவாகரன்
மிருதங்கம்: இசைக்கலைமணி திரு. எஸ். கரிகரன்
முகர்சிங்: செல்வன் தி. நந்தகுமார்
கலைஞர்கள் கௌரவிப்பு
இந்து கலாசார அமைச்சினால் "கலாபூஷணம்" விருது வழங்கப்பட்ட கலைஞர்கள்
கலாபூஷணம் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)
கலாபூஷணம் வ. செல்லத்துரை
இவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.
7. 05 மணி — **முத்தமிழ் விழா மலர் வெளியீடு**
7. 15 மணி — நாடகம்: "பாஞ்சாலி சபதம்" கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
7. 20 மணி — நன்றியுரை: செயலாளர் கலாசாரப் பேரவை, கோப்பாய்.

சுபம்

**கலாசாரப் பேரவை**
வலி. கிழக்கு.

(சி/9324)

## வாழ்த்துகின்றோம்

★★★★★ ****** ★★★★★

25 ஆண்டுகால இணையற்ற கல்விச் சேவையில்
வெள்ளி விழாக் காணும்

**விஞ்ஞானம்**
**இரா. செல்வவடிவேல்**

ஆசிரியர் அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

க. தேவராஜா
(தலைவர், வர்த்தகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

த. வரதராஜா
(அதிபர், எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை.)

ஞான. திருக்கேதீஸ்வரன்
(ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி.)

சண். வாமதேவன்
(உப அதிபர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.)

இரா. அருட் செல்வம்
(எஸ். சந்திர மௌலி, ஆசிரியர்.)

வி. தயாபாலன்
(கங்கை கொம்பியூட்டர் பிறின்ற்)

ஞான. திருக்கேதீஸ்வரன்,
இணுவில். [69996]

## ஓடி மறைந்த ஓராண்டு நினைவு

மாதா மடியில் 08 – 06 – 1912



பாபா அடியில் 28 – 09 – 1998

அமரர் **வே. சின்னப்பு**
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: 17 – 10 – 99

காலத்தின் கணக்கில் ஓடியது ஓராண்டு
கடவுளின் பாதத்தில் சின்னப்பூவாய் நீர் சென்று
உள்ளக் கணக்கில் உத்தமனாய் என்றும்
உள்ளீர் எம் நினைவுகளில் நிஜமாய்.

பகவான் பாதத்தில் உம் சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
மைத்துனி, பெறாமக்கள்.

முதலாம்கட்டை,
உடுவில். (70000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுகின்றோம்



'' ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் '' என்பதற்கிணங்க

குருநகர் போசப்வாஸ் இளைஞர் மன்றம் நடத்திய ஆங்கிலப் பாஷைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்

செல்வன்

### வரதராசன் தயாளனுக்கு

மன்றக் காப்பாளரும், புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையுமான B. F. பொனிபேர்ஸ் அடிகளார் 09 - 10 - 99 அன்று பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

அவரைக் கல்வித் துறையில் மேன்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
சித்தப்பா, மாமா.

இல- 12, முதலாம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (70037)



## தரமான தொலைத் தொடர்பு சேவை

உடுவில் மேற்கில்
உங்கள் தொலைத்தொடர்பு சேவைகளுக்கு
உடன் நாடுங்கள்:

### ஐங்கரன் தொலைத் தொடர்பகம்

தொலைபேசி இல. உள்நாடு: 070 - 212611
வெளிநாடு: 0094 - 070 212611

[70030]


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் கோபாலசிங்கம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கோபாலசிங்கம் 13- 10 - 99 அன்று புதன்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜீவசோதியின் அன்புக் கணவரும், ஜீவபாலன், அம்பிகைபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற முத்துராஜா-சித்திரா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரனும், ரத்தி (கொழும்பு), சாந்தி, இராஜேந்தி, பாபு, கிரி (கனடா), ஜெயந்தி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 — 10 — 99 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகன்

நாவற்குழி,
கைதடி. (70049)

### திருமதி இராமசாமி லட்சுமிஅம்மாள்

திருமதி இராமசாமி லட்சுமிஅம்மாள் 15-10-99 வெள்ளிக்கிழமை இந்தியாவில் சென்னையில் காலமானார்.

அன்னார் பாலகிருஷ்ணனின் (பாலா—கந்தர் மடம் அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் ஆலயத்தொண்டர்) அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-10-99) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலா

50, புகையிரத கிழக்கு வீதி,
கந்தர்மடம். [70025]

## கூடைப்பந்தாட்ட ஆடுகளம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வேம்படி மகளிர் கல்லூரிக்கு 5 லட்சம் ரூபா செலவில் புதிய கூடைப்பந்தாட்ட ஆடுகளம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த ஆடுகளம், மிக விரைவில் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. (இ-9)

## பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு — கிழக்கு கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு நடத்தும் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுகளுக்கான பயிற்சி முகாம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து மூன்று நாள்கள் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ள இந்தப் பயிற்சி முகாமில் பிரதேச செயலக மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீர வீராங்கனைகள் பங்குபற்ற உள்ளனர்.

இந்தப் பயிற்சி முகாமுக்கான பயிற்சிகளை வடக்கு—கிழக்கு கல்வி, கலாசார, விளையாட்டுத்துறையின் பயிற்சியாளர்கள் வழங்குவார்கள். (இ-4-8)

## மென்பந்து கிரிக்கெட்

கல்வியங்காடு, ஒக். 17

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பரா' வெற்றிக் கேடயத்துக்கான 12 பேர் பங்குபற்றும் 7 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், இன்று செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விபரம் வருமாறு;-

★ காலை 9-00 மணிக்கு— கலாமன்றம் வி. க. எதிர் ரி. எஸ். சி. வி. க.

★ காலை 10-30 மணிக்கு— வர்த்தக வங்கி எதிர் வினாயகர் 'ஏ' வி. க.

★ நண்பகல் 12 மணிக்கு அரியாலை ஐக்கிய வி. க. 'பி' எதிர் சீ கொக்ஸ் 'ஏ' வி. க.

★ பிற்பகல் 2 மணிக்கு — ஈச்சமோட்டை வி. க. எதிர் ஜோண் பிளயர்ஸ் வி. க.

★ மாலை 3-30 மணிக்கு— கலைவாணி வி. க. எதிர் சென்ஜோன்ஸ்.

(இ-4-8)

## விளையாட்டு அபிவிருத்திச் சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையின் கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு சகல விளையாட்டுச் சங்க செயலாளர்களையும் சமுகம் தருமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபை கேட்டுள்ளது.

இன்று நடைபெற உள்ள கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் சர்வதேச விளையாட்டு அரங்கு ஒன்றை நிர்மாணிப்பதற்காக இடம் ஒன்றைத் தீர்மானிப்பது பற்றியும்—

சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட உள்ள விசேட செயற்றிட்டங்கள் பற்றியும்—

அதற்குத் தேவையான உதவிகள் பற்றியும்—ஆராயப்பட உள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-4-8)

## யாழ். மாவட்ட அணி வெற்றி

மட்டக்களப்பு, ஒக். 17

15 வயதுக்கு உட்பட்ட யாழ். மாவட்டக் கிரிக்கெட் அணிக்கும் வவுனியா மாவட்டக் கிரிக்கெட் அணிக்கும் இடையே மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 7 விக்கெட்டுகளால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 38 ஓவர்களில் 100 ஓட்டங்களைப்பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யாழ். மாவட்ட அணி சார்பாக சிறப்பாக பந்துவீசி வி.ராஜாதித்தன் 4 விக்கெட்டுக்களையும் வி.ரஜீவ்குமார் 3விக்கெட்டுக்ளையும் விஷ்ணுகாந் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை 25 ஓவர்களிலேயே பெற்றது.

யாழ்.மாவட்ட அணி சார்பாக கிறேட்சன் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட அணிக்கும் திருகோணமலை மாவட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணி 9 விக்கெட்டுக்களால் வென்றது.

இன்று யாழ்.மாவட்ட அணி திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து விளையாடும். (இ-4-8)


உ
சிவமயம்

## நவராத்திரி விழா இசையரங்கு

காலம்:- இன்று (17-10-99) ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3 00 மணி (இலங்கை நேரம்)

இடம்:- கந்தசுவாமி கோயிலடி, இணுவில்
(இசையாசிரியர் க. இராமநாதன் வீடு)

நிகழ்ச்சி:

பாட்டு — பொன். ஸ்ரீவாமதேவன்
வயலின் — க. குகபரன்
மிருதங்கம் — சி. துரைராசா
கடம் — அ. செல்வரத்தினம்

இசையார்வலர் அனைவரும் வருக.

க. இராமநாதன்
(இசையாசிரியர்)

(70041)



## பாராட்டுகிறோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் மிகப் பொருத்தமாக மதிப்பிற்குரிய கலாநிதிப்பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட

கவிஞர்

### இராமுப்பிள்ளை முருகையன்

அவர்களைப் பாராட்டி மனதார வாழ்த்துகிறோம்.

திரு திருமதி தேவகி தங்கவேல
குடும்பத்தினர்.

கந்தர்மடம். [70040]



## வாணி மனைப் பொருளியல் பயிற்சி

- PAN CLAY FLOWERS & ARRANGEMENTS
- COSTUME JEWELLERY (Stone & String)
- கேக் ஐசிங்
- FONDANT ICING
- SUGAR CRAFT
- BOUQUET MAKING
- FABRIC PAINTING
- MAKE UP (சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள், மணப்பெண் அலங்காரம்)

மேற்கூறிய பயிற்சிகள் யாவும் விஜயதசமி தினத்தன்று (19-10-99) காலை 10 45 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:-

வாணி
73, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2782 (70033)



இராமநாதன் நுண்கலைக் கழகம்
யாழ். பல்கலைக்கழகம்

## விசேட அறிவித்தல்

1 ஆம், 2 ஆம் வருட பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அனைவரையும் நாளை 18—10 -99 திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு நுண்கலைத்துறை வளாகத்தில் இசை, நடனத்துறை தலைவர்களை சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

— செயலாளர்

நுண்கலைக் கழகம்,
மருதனார்மடம். (70051)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா நாயகனை

**வாழ்த்துகின்றோம்**

சங்கீத பூசணம்

**சு. கணபதிப்பிள்ளை**

கணபதிப் பிள்ளைப்பேர்க் காவலனே!
கலைமுகிலே! கலைஞ! வாழி
மணமுடையாய்! மணிவிழாக்காண்கின்றாய்
மகிழ்கின்றோம் வாழி! வாழி!
குணக்குன்றே! அன்புடையாய்! குலவுமிசைக்
குயிலே நீ! வாழி வாழி
துணையுடனே. பல்லாண்டு இசைவளர்த்துத்
தூயோய்நீ வாழி வாழி

திரு திருமதி சி. நவரத்தினம்

'கோகுலம்'
சித்தன்கேணி. (70052)

**வாழ்த்துகின்றோம்**

பிரதிக்கல்விப்பணிப்பாளர், சங்கீத பூசணம்

**சு. கணபதிப்பிள்ளை**

அவர்களுக்கு இன்று மணிவிழா நடத்துவது பொருத்தமானதே. கல்வி. சமய, சமூகப்பணிகள் நிறைந்த இவர் ஒரு பெயர்பெற்ற இசை வள்ளல். சங்கீதத்தில் நிறைந்த இசைஞானம் கொண்டவர்.

சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, தமிழ்ப் பணி ஆகிய பணிகளை மேன்மேலும் ஆற்றுவதற்கு இவருக்கு நீண்ட ஆயுளை எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றோம்.

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், சங்கானை.
(சி/9387)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சிறந்த சமூக சேவையாளரும் நீதிசேவையில் 35 வருடங்கள் சேவையாற்றியவருமான

**திரு. கதிர்காமர் வாரித்தம்பி**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பாராட்டுவதுடன் அவர்களது குடும்பம் சிறந்தோங்கி வாழ மனதாரப்பாராட்டுகின்றோம்.

வ. இராசதுரை குடும்பத்தினர்

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

சீசன்ஸ்
நவீன சந்தை,
சாவகச்சேரி.

(சி/9391)

**YOGI HOME SCIENCE ACADEMY**

குறுகிய கால புதிய வகுப்புக்கள்
21--10--99 அன்று ஆரம்பமாக உள்ளன.

- துணியில் வர்ண அலங்காரிப்பு (Fabric Paintng) [7 வகுப்புக்கள் மட்டும்]
- அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரமும் (15 வகுப்புக்கள் மட்டும்)

சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
75, :அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

T. Phone 2796 [70027]

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க!
பிரிவு II ஆரம்பம்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

LECTURES BY: Mr. M. A. HARI

ஆரம்பம்:- 18 - 10 - 1999
திங்கள் மாலை 4.30 மணி

MONDAY / WEDNESDAY } 4-30 p. m — 5-30 p. m.

★ அனுமதிக்கு முந்துங்கள்.

**நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

- நிர்வாகி

(70036)

# நகரின் மத்தியில் வீதிகள் வெள்ளக் காடாகக் காட்சி

## பாதசாரிகளுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஒக். 17

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக யாழ். பஸ் நிலையைப் பகுதியும் அதனை அண்டியுள்ள இடங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

மின்சாரநிலையவீதி, ஆஸ்பத்திரி வீதி மற்றும் நவீன சந்தைக்கு முன்பாக உள்ள வைரவர் கோவில் சந்தி ஆகியவை குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் அவ்விடங்களில் வெள்ளம் தேங்கி உள்ளது. பிரயாணிகள் மற்றும் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தேங்கி நிற்கும் வெள்ளத்திற்கு நடுவாகவே பாதசாரிகள் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வாகனங்கள் வேகமாகச் செல்லும் போது தேங்கி நிற்கும் வெள்ளம் மக்கள் மீது வீசியடிக்கப்படுவதால் அவர்கள் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது

நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனத் தினமும் நூற்றுக் கணக்கான மக்கள் இந்த பஸ்நிலையத்தின் ஊடாகவே பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. [ஐ-10]

## ஓலுமடுப்...

(முதலாம் பக்கத் தொடர்)

னர் காயமடைந்துள்ளனர் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

நேற்று பிற்பகலுக்குப் பின் மீண்டும் கடும் மோதல்கள் இந்தப்பகுதியில் இடம்பெற்று வருவதாகவும்—

போர் முனையில் நடத்தப்படும் ஆட்லறி ஷெல் தாக்குதலின் சத்தம் நேற்றிரவு வரை வவுனியா நகரில் கேட்டதாகவும்—தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று படையினருடன் இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப் புலிகளுக்குஏற்பட்ட இழப்புபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (இ-5-164-21)

எமது புதிய பிரமிட CD வெளியீடு

**பிரசாந்தின் நட்சத்திர இரவு**

(மலேசியாவில் நடந்த, பிரசாந்துடன் திடைப்பட முன்னணி நட்சத்திரங்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சி - பிரமிட் CD)

**ஜோடி**
(பிரமிட் C D)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்
(சி/9890)

எமது
புதிய வீடியோ
CD வெளியீடுகள்
வினேக்குமார் - மதுபாலா
நடித்த
**ர..ப் அன்ட் ட..ப்**
(ஒரிஜினல் CD)
பிரசாந், சிம்ரான், தேவயாணி மற்றும் பல நடிகர், நடிகைகள் பங்கு பற்றிய
பிரசாந்தின்
மலேசிய
இசை நிகழ்ச்சி
(பிரமிட் CD)
அடுத்த வெளியீடு
**பேய் வம்சம்**

**சுப்பஸோ வீடியோ**
யாழ்ப்பாணம்
(இ/9393)

## படக்காட்சி

சுன்னாகம், ஒக். 17

யாழ். திரைப்பட வட்டத்தால் நடத்தப்படும் திரைப்படக் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும். இதில் 'றொமேறோ' என்ற திரைப்படம் காண்பிக்கப்படும். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். [ஐ-27]

## ஆரையம்பதியில் இருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஒக். 17

மட்டக்களப்பு ஆரையம்பதி பாலமுனையில் நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் விசேட அதிரடிப் படையினரால் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆரையம்பதி வாசிகளான எஸ். கரிகாலன் (வயது 24), இளையதம்பி குணசீலன் (வயது 19) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்காக அதிரடிப் படையினர் மேற்குறிப்பிட்ட பகுதியில் பதுங்கிருந்த போதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் உத்தரவை மீறிஇரு இளைஞர்களும் தப்பியோட முயன்ற போதுதாம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (இ-5-21)

## புத்தளத்தில் சமாதான யாத்திரை

கொழும்பு ஒக். 17

நாட்டில் சமாதானம் வேண்டி புத்தளம் ஆனமடுவ பகுதியில் சர்வோதயத்தினால் நேற்று சமாதானபாத யாத்திரை நடத்தப்பட்டது.

சர்வோதய தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா தலைமையில் நடைபெற்ற சமாதான யாத்திரையின் இறுதியில் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம் பெற்றன. (இ-5)

## கை. கால்....

(முதலாம் பக்கத் தொடர்)

திருமதி ரஞ்சினி சிதம்பரநாதன் நடத்தினார்.

மரண விசாரணையை நடத்திய உத்தியோகப்பற்றற்ற பதில் நீதிவான் வா. சுப்பிரமணியம் பகிரங்க தீர்ப்பு வழங்கியதுடன் சடலத்தைப் புதைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த மரணம் தொடர்பான மேல் விசாரணையை தொடருமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (இ-5-109-173(

## ரெலோ விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 17

"பொதுமக்களின் பொதுவான வேலைத் திட்டங்கள் விடயமாகவோ அல்லது வேறு விடயங்கள் சம்பந்தமாகவோ தாம் எந்தவொரு தமிழ்க்கட்சியுடனும் பேசவில்லை" என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

பொது வேலைத் திட்டத்தின் கீழ் நான்கு தமிழ்க்கட்சிகளும் இணையவிருக்கின்றன என்று வெளியான செய்திகள் தொடர்பாகவே அந்த அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது விடயமாக வேறு எந்தக் கட்சியும் தம்முடன் பேச்சு எதையும் நடத்தவில்லை என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

(ஐ-3)

## புலமைப் பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள்.

★ வி காருண்யா (புனித ஜோன் பொஸ்கோ) — 166 புள்ளிகள்.

மேற்படி பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றபாடசாலைகள் சிலவும் அப்பாடசாலைகளில் இருந்து சித்தி பெற்றோர் மற்றும் தோற்றியோர் எண்ணிக்கையும் வருமாறு:-

★ புனித ஜோன் பொஸ்கோ 65 பேர் சித்தி (136)

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை—52 பேர் சித்தி (155)

★ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை — 31 பேர் சித்தி (118)

★ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை—30 பேர் சித்தி (118)

★ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை — 29 பேர் சித்தி (99)

★ சென். ஜோன்ஸ் கல்லூரி — 22 பேர் சித்தி (78)

★ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி — 17 பேர் சித்தி (77)

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி — 15 பேர் சித்தி (76)

★ தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை — 15 பேர் சித்தி [57]

★ இணுவில் மத்திய கல்லூரி — 18 பேர் சித்தி [83]

★ உடுவில் மகளிர் கல்லூரி — 14 பேர் சித்தி [87]

★ சென் பற்றிக்ஸ் கல்லூரி — 13 பேர் சித்தி [58]

★ மகாஜனக் கல்லூரி — 12 பேர் சித்தி [55]

★ கரவெட்டி ஞானாச்சாரியார் பாடசாலை — 13 பேர் சித்தி [34]

★ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி — 15 பேர் சித்தி [60]

★ கல்வியங்காடு இ. த.க. பாடசாலை — 10 பேர் சித்தி [35]

★ சுதுமலை சின்மயபாரதி வித்தியாசாலை — 10 பேர் சித்தி [47]

★ யாழ். மத்தியகல்லூரி— 3 பேர் சித்தி [71]

அதேசமயம் —

யாழ. மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 207 பாடசாலைகளில் இருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எவரும் சித்திபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

## கடற் கரும்புலிகளின்...

[முதலாம் பக்கத் தொடர்]

★ மேஜர் கோபி அல்லது பரணி (ஆரிய யோகானந்தர் அமிர்நாத் — யாழ் மாவட்டம்)

★ மேஜர் காரிமகள் (ஆரியக்குட்டி கலைமதி — யாழ்.)

★ மேஜர் சூரியபிரபா (அல்போன்சா ஜான்ஸிராணி — யாழ். )

★ சுதாகரன் அல்லது சுதாகர் ( ராசநாயகம் பிரசன்னா — யாழ். )

கடற் படையினருடன் அன்றைய தினம் இடம்பெற்ற மோதலில் கடற் புலிகள் தரப்பில் மேஜர் துவாரகன் ( சங்கரன் ராஜ்குமார் — யாழ். ) உயிரிழந்ததாகவும் புலிகளின் குரல் தெரிவித்தது. (இ-5-164)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 17-10-1999 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org